# சாமானியனும் சக்கரவர்த்தி ஆகலாம்




தொகுப்பு : ஐயாச்சாமி முருகன்
கீழக்கலங்கல், திருநெல்வேலி

# இந்திய குடிமைப்பணித்தேர்வு அறிமுகம்

பொருளடக்கம்


1 குடிமைப் பணிகளின் தன்மைகள்

2 குடிமைப்பணிகளின் வகைகள்

3 பணிகளின் பயிற்சி மற்றும் முக்கியத்துவம்

4 தேர்வு தொடர்பான தகவல்கள்

5 முதல்நிலைத்தேர்வின் அமைப்பு மற்றும் பாடத்திட்டம்

6 முதல் நிலைத்தேர்விற்கான அணுகுமுறை

7 முதன்மைத் தேர்வு

8 முதன்மைத் தேர்வின் அமைப்பு

9 நேர்காணல் தேர்வு

10 முதன்மைத் தேர்வு பாடத்திட்டம்

11 விருப்பப் பாடத்தின் பட்டியல்கள்

12 முதன்மைத் தேர்வு வினாக்களின் பல்வேறு வகைகள்

13 பொதுவாக ஏற்படும் சந்தேகங்கள்

14 விருப்பப்பாடத்தை எவ்வாறு தேர்ந்தெடுப்பது?

15 தமிழில் எவ்வாறு தயாராவது?

16 இத்தேர்வு பற்றிய மாயைகள்

17 பயிற்சி விவரம்


**அன்பு நண்பர்களுக்கு வணக்கம். குடிமைப் பணித்தேர்வு தயாரிப்புக்கு வருகை தரும் அனைவரையும் வரவேற்கிறேன். ஒரு நல்ல நோக்கத்திற்காக நீங்கள் இப்பாதையை தேர்ந்தெடுத்துள்ளீர்கள் என நம்புகிறேன். இந்தத் தொகுப்பில் இந்திய குடிமைப் பணிகளை வகைப்படுத்தி அவற்றின் தன்மைகளையும், தேர்வு முறை பற்றிய சுருக்கம், முதல் நிலைத்தேர்வு முதன்மைத் தேர்வு, நேர்காணல் ஆகியவற்றின் பாடத்திட்டம், வினாக்களின் வகைகள் , தயாரிப்பின் போது ஏற்படக்கூடிய இடர்பாடுகள், தேர்வுக்கான தயாரிப்பின் அடிப்படை ஆகியவற்றை நான் அறிந்த வரையில் தொகுத்துள்ளேன். இந்த தொகுப்பினை பற்றிய தங்கள் மேலான கருத்தினை m.iyachamy@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியில் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.**


**ஐயாச்சாமி முருகன்**

**கீழக்கலங்கல், திருநெல்வேலி**

**ஐயாச்சாமி அகாதெமி, சென்னை**

# இந்திய குடிமைப்பணித்தேர்வு அறிமுகம்

## குடிமைப் பணிகளின் தன்மைகள்

பொதுமக்களால் கலெக்டர் என அழைக்கப்படும் ஐ ஏ எஸ் தேர்வு என்பது குடிமைப்பணித் தேர்வுகளில் ஒன்று, கீழ்மைப் பணியானது தமிழ்நாடு அரசால் பணியமர்த்தப்படும் இளநிலை உதவியாளர் பணியிலிருந்து அமைச்சரவைச் செயலாளர் வரை குடிமைப் பணிகள் தான். ஆனால் மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தேர்வு குடிமைப் பணிகள் தேர்வாகும். இத்தேர்வு பொதுவாக ஐ ஏ எஸ் தேர்வு என அறியப்படுகிறது. ஐ ஏ எஸ் என்பது குடிமைப் பணித்தேர்வில் ஒரு மாணவர் எடுக்கும் தரவரிசைப் பட்டியலின் அடிப்படையில் குடிமைப்பணிதேர்வில் முதலாவது பணிதான். குடிமைப் பணித்தேர்வில் பல்வேறு பதவிகள் உள்ளன எ. கா இந்திய காவல் பணி, இந்திய வருவாய் பணி, இந்திய அஞ்சல் பணி போன்ற போன்ற பணிகளும் உள்ளடங்கும்.

பொதுவாக, குடிமைப் பணித் தேர்வுக்கு தயாராகிக் கொண்டிருக்கும் மாணவர்கள், இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, இந்திய வனப்பணி, இந்திய வருவாய்ப் பணி ஆகிய பணிகளின் தன்மையை மட்டுமே அறிந்துள்ளனர். பிற பணிகளான, இந்திய அஞ்சல் பணி, இந்திய தகவல் பணி, இந்திய கணக்கு மற்றும் தணிக்கைப் பணி, இந்தியப் பாதுகாப்பு பணி போன்ற பணிகளின் தன்மை, முக்கியத்துவம் போன்றவற்றை அறிந்திருப்பதில்லை. இதனால் தேர்வர்கள் பணி முன்னுரிமைத் தெரிவின் போது மிகுந்த குழப்பத்திற்குள்ளாகின்றனர். தற்போது பணி முன்னுரிமை விருப்ப அளிப்பு என்பது முதன்மைத் தேர்வுக்கு மாணவர்கள் விண்ணப்பிக்கும் போதே தாங்கள் விரும்பும் பணியின் தெரிவை வரிசையாகவும், அதேபோல் எந்த மாநிலத்தில் தாங்கள் பணி புரிய விரும்புகின்றீர்கள் எனவும் தெரியப் படுத்தவேண்டும். (2017 முதல் இந்த மாநில பிரிவானது மாற்றப்பட்டு மண்டல விருப்புரிமைத் தெரிவாக மாற்றப்பட்டுள்ளது). இவ்வாறு முதன்மைத் தேர்வின் விரிவான விளக்க விண்ணப்பித்தலில் குறிப்பிட வேண்டும், மேலும் உங்கள் தரவரிசைப் பட்டியலின் அடிப்படையிலும், விருப்புரிமைப் பணித் தெரிவின் அடிப்படையிலும் உங்களுக்கான பணியிடம் ஒதுக்கப்படும்.

தேர்வுக்கு தயாராகுபவர்களிடம் பொதுவான ஒரு எண்ணம் காணப்படுகிறது. குடிமைப் பணித் தேர்வுகளிலே இந்திய ஆட்சிப்பணி, காவல் பணி, அயலுறவுப் பணி ஆகியவைதான் உயர்ந்தது என என்னுகின்றனர். இந்திய ஆட்சிப் பணி மற்றும் காவல் பணி ஆகியவற்றில் களப்பணி செய்வதற்கான வாய்ப்பு உண்டு. பிற பணிகள் பெரும்பாலும் அலுவலகம் சார்ந்ததாக இருக்கும். ஆனால் ஒவ்வொரு பணியும் தனிப்பட்ட வகையில் தனித்துவமும் முக்கியத்துவமும் வாய்ந்ததுதான். இந்திய ஆட்சிப் பணியை பொறுத்தவரை அது ஒரு பொதுவான பணியாகும் எந்த ஒரு துறையையும் சார்ந்தது அல்ல. ஆனால் இந்தியக் காவல் பணியை பொறுத்தவரை, சட்டம் ஒழுங்கு, உள் நாட்டு பாதுகாப்பு போன்றவற்றில் மட்டுமே பணி செய்ய இயலும், இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகளோ வருவாய் நிர்வாகம், மேம்பாட்டு நிர்வாகம், கொள்கை வகுத்தல் என முக்கியப் பணிகளில் அனைத்து துறை சார்ந்தும் இயங்குவார்கள். மேலும் அனைத்து துறையிலும் செயலர் எனப்படும் முக்கிய தலைமையாக இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகளே பதவிகளை அலங்கரித்துக் கொண்டிருக்கின்றனர் என்பதை மறுக்க இயலாது. ஆனால் ஒவ்வொரு பணியும் அதற்கேற்றாற் போல தனியொரு சிறப்பைக் கொண்டிருக்கிறது. இந்திய வருவாய்ப் பணியை பொறுத்தவரை வருமான வரிச் சட்டங்களை அமல்படுத்துதல், வரி தொடர்பான பணிகளைச் செய்தல் போன்ற பணிகளில் ஈடுபடுவதாகும். மற்ற பணிகளும் அந்தந்த துறைசார்ந்த வகையில் முக்கியமானது தான்.

## குடிமைப்பணிகளின் வகைகள்

பொதுவாக குடிமைப் பணிகள் இருவகைப்படும்

### அனைத்திந்திய பணிகள்

- Indian Administrative Service. இந்திய ஆட்சிப் பணி
- Indian Police Service. இந்தியக் காவல் பணி
- Indian Forest servie இந்திய வனப்பணி

### மத்தியப் பணிகள்

- Indian Foreign Service. இந்திய வெளியுறவுப்பணி
- Indian P & T Accounts & Finance Service, Group 'A'. இந்திய தபால் தொலை தொடர்பு கணக்கு மற்றும் நிதி சேவை
- Indian Audit and Accounts Service, Group 'A'. இந்திய தணிக்கை மற்றும் கணக்கு சேவைக் குழு
- Indian Revenue Service (Customs and Central Excise) Group 'A'. இந்திய வருவாய் பணி சுங்கம் மற்றும் கலால்
- Indian Defence Accounts Service, Group 'A'. இந்திய பாதுகாப்புப் பணி
- Indian Revenue Service, Group 'A'. இந்திய வருவாய் பணி
- Indian Ordnance Factories Service, Group 'A இந்திய பீரங்கி தொழிற்சாலைப் பணி
- Indian Postal Service, Group 'A'. இந்திய அஞ்சல் பணி
- Indian Civil Accounts Service, Group 'A'. இந்திய உள்நாட்டு கணக்கு சேவை
- Indian Railway Traffic Service, Group 'A'. இந்திய இரயில் போக்குவரத்து சேவை
- Indian Railway Accounts Service, Group 'A'. இந்திய இரயில்வே கணக்கு சேவை
- Indian Railway Personnel Service, Group 'A'. இந்திய இரயில்வே பணியாளா; சேவை
- Post of Assistant Security Officer, Group 'A' in RPF. உதவி பாதுகாப்பு அதிகாரி பணி
- Indian Defence Estates Service, Group 'A'. இந்திய பாதுகாப்பு மற்றும் தேயிலை தோப்பு சேவை
- Indian Information Service (Junior Grade), Group 'A'. இந்திய தகவல் சேவை
- Indian Trade Service, Group "A". இந்திய வர்த்தக சேவை
- Indian Corporate Law Service, Group "A". இந்திய நிறுவன சட்ட சேவை
- Armed Forces Headquarters Civil Service, Group 'B'. இந்திய ஆயுதப் படைகளின் தலைமை
- Delhi, Andaman & Nicobar Islands, Lakshadweep, Daman & Diu and Dadra & Nagar Haveli Civil Service, Group 'B'. தில்லி, அந்தமான், நிக்கோபார், லட்சத்தீவு டாமன் டையு மற்றும் தாத்ரா நாகர்ஹவேலி சிவில் சர்வீஸ்

# இந்திய குடிமைப்பணித்தேர்வு அறிமுகம்

- **Delhi, Andaman & Nicobar Islands, Lakshadweep, Daman & Diu and Dadra & Nagar Haveli police Service, Group 'B'** தில்லி, அந்தமான், நிக்கோபார், லட்சத்தீவு டாமன் டையு மற்றும் தாத்ரா நாகர்ஹவேலி காவல் பணி
- **Pondicherry Civil Service, Group 'B'.** பாண்டிச்சேரி ஆட்சிப் பணி
- **Pondicherry Police Service, Group 'B.** பாண்டிச்சேரி காவல் பணி

மேலே குறிப்பிட்ட பணிகளுள் இந்திய ஆட்சிப் பணியும், இந்திய காவல் பணியும் அகில இந்தியப் பணிகள் அதாவது அவர்களின் விருப்பத் தெரிவினைப் பொருத்து எந்த மாநிலத்தில் வேண்டுமானாலும் பணியமர்த்தப்படலாம். (முதன்மைத் தேர்வின் போது அவர்கள் தெரிவிக்கும் விருப்பம் மற்றும் தரவரிசையைப் பொருத்து அமையும்). இந்தத் தேர்வில் வெற்றி பெற்றவர்கள் அனைவருக்கும் நூறு நாட்கள் அடிப்படை பயிற்சிகள் அளிக்கப்படும். பொதுவாக அகில இந்தியப் பணிகளுக்கான பயிற்சி, லால் பகதூர் சாஸ்திரி தேசிய நிர்வாகப்பள்ளியில் அளிக்கப்படும். நூறு நாட்கள் அடிப்படை பயிற்சி நிறைவடைந்த பின்பு அவர்கள் பணி சார்ந்த சிறப்பு பயிற்சிக்கு அனுப்பப்படுவர். இந்திய காவல் பணியை தேர்ந்தெடுத்தவர்களுக்கு ஹைதராபத்தில் உள்ள சர்தார் படேல் பயிற்சிப் பள்ளியில் பயிற்சி அளிக்கப்படும். அதேபோல் இந்திய வருவாய்ப் பணியினை தேர்ந்தெடுத்தவர்களுக்கு நாக்பூர், இந்திய இரயில்வே சேவைப் பணியை சார்ந்தவர்களுக்கு வதோரா போன்ற இடங்களில் பயிற்சி அளிக்கப்படும்.

அடிப்படைப் பயிற்சியை (Foundation Course) பொறுத்தவரை தேர்வான அனைவருக்கும் அளிக்கப்படும் ஆனால், இந்திய ஆட்சிப் பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டோர் கட்டாயமாக அடிப்படைப் பயிற்சியில் சேர்ந்து கொள்ளவேண்டும். பிற பணியிடங்களை தேர்ந்தெடுத்தோர் அடுத்து வரும் ஆண்டுகளில் தேர்வெழுதுவதாக இருந்தால் அடிப்படைப் பயிற்சியை பெறாமலே பணி சார்ந்த சிறப்புப் பயிற்சியில் சேரலாம் ஆனால் இந்திய அயலுறவுப்பணியை தெரிவு செய்தவர்கள் அடிப்படை பயிற்சியை தவிர்க்க இயலாது அவ்வாறு அடிப்படை பயிற்சியை தவிர்க்க விரும்பினால் ராஜினாமா செய்ய வேண்டும்.

இந்திய ஆட்சிப்பணி அதிகாரிகள் அடிப்படை பயிற்சிகள் முடிவடைந்த பின் பாரத் தர்ஷன் எனப்படும் அகில இந்திய சுற்றுலாவிற்கு குழுவாக அழைத்துச் செல்லப்படுவர். அவர்கள் இந்தியாவில் உள்ள பல்வேறு முக்கிய இடங்களான, இராணுவ மையம், அரசு அலுவலகங்கள், மாவட்ட நிர்வாகம் தொடர்பாக மாவட்ட ஆட்சியரகம், செயலகம், பாரளுமன்றம் போன்ற இடங்களுக்குச் சென்று பார்வையிடுவர். பாரத் தர்ஷன் போல் பிற பணியைச் சார்ந்த அதிகாரிகளுக்கும் இது போன்று பார்வையிடும் நிகழ்ச்சிகள் உண்டு.

மேலும் பணியில் சேர்ந்து ஐந்து ஆண்டுகள் சேவைக்குப் பின் குடிமைப் பணி அதிகாரிகள் சம்பளத்துடன் கூடிய விடுப்புடன் உயர்கல்வி பயில்வதற்கான வாய்ப்பையும் அரசு வழங்குகிறது. அதிகபட்சமாக 24 மாதங்கள் சம்பளம் மற்றும் விடுப்புடன் கூடிய அனுமதி மேற்படிப்புக்காக வழங்கப்படுகிறது. மேற்படிப்பினை இந்தியாவிலோ அல்லது வெளி நாட்டிலோ கூட மேற்கொள்ளலாம்.

மத்தியப் பணிகளை தேர்ந்தெடுத்தோர் மத்திய அரசின் கீழ் உள்ள பல்வேறு பணிகளுக்காக பணியமர்த்தப்படுவார்கள், இவர்கள் எந்தவொரு மாநில அரசையும் சேர்ந்தவர்களல்லர். உதாரணமாக இந்திய இரயில்வே சேவை கணக்கு பணியில் சேர்ந்தவர்கள் இந்தியாவின் எந்த மாநிலத்திலும் பணியமர்த்தப்படுவார்கள் ஆனால் அகில இந்திய பணிகளை பொறுத்தமட்டில் ஒருவர் அவருக்காக ஒதுக்கப்படும் மாநிலத்தில் அந்த மாநில அரசின் கீழ் பணியாற்றுவார்கள் ஆனால் சில நேரங்களில் மாற்றுப் பணி (deputation) மூலம் மத்திய அரசின் கீழ் பணியாற்றுவார்கள். உதாரணமாக மாநில காவல்துறையில் டி ஜி பியாக இருந்த திருமதி அர்ச்சனா ராமசுந்தரம் முதலில் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் சிபிஐ யில் பணியில் சேர்ந்தார் பின்னர் சாஸ்திரிய சீமாபால் எனப்படும் மத்திய அரசின் வேறொரு காவல் பிரிவிற்குச் சென்றார். அதேபோல் ஆட்சிப்பணி அதிகாரியான திரு சக்தி காந்த தாஸ் அவர்கள் தமிழகப் பிரிவு அதிகாரியாவார் ஆனால் அவர் மத்திய பொருளாதார விவகாரங்களுக்கான செயலாளராக நியமிக்கப்பட்டார். இம்முறையே மாற்றுப் பணி (Deputation) எனப்படும்.

இந்திய அயலுறவுப் பணியைப் பொறுத்தவரை அந்தப் பணியை தேர்வு செய்தவர் மத்தியபணியிலேயே இருப்பர் அதாவது இந்திய அரசின் தூதரகம், பாஸ்போர்ட் அலுவலகங்கள், வெளிநாட்டு தூதர், சில பன்னாட்டு அமைப்புகளின் தூதர்களாக இருப்பர்.

## தேர்வு எப்போது நடத்தப்படும்?

ஆண்டுதோறும் நடத்தப்படும். பிப்ரவரி அல்லது மார்ச் மாதம் அறிவிக்கை வெளியிடப்படும்.

| | | |
|---|---|---|
| முதல் நிலைதேர்வு | : | பொதுவாக மே அல்லது ஜூன் மாதம் நடைபெறும் |
| முதன்மைத்தேர்வு | : | அக்டோபர்/ நவம்பர் மாதங்களில் நடைபெறும் |
| நேர்காணல் | : | அடுத்த ஆண்டு பிப்ரவரி/ மார்ச் |
| தேர்வு முடிவுகள் | ; | அடுத்த முதல் நிலைத் தேர்வு நடைபெறுவதற்கு முன் வெளியிடப்படும். |

## போட்டியின் தன்மை எவ்வாறு இருக்கும்?

பொதுவாக முதல் நிலைத்தேர்விற்கு 10 லட்சம் பேர் வரை ஆண்டுதோறும் விண்ணப்பம் செய்வார்கள் ஆனால் இதில் உண்மையான போட்டியாளர்களாக %10 பேர்கள் மட்டுமே இருப்பர்.

## முந்தைய ஆண்டுகளின் தேர்வு விபரம்

| வருடம் | முதல் நிலத்தேர்விற்கு விண்ணப்பித்தவர்கள் | முதல் நிலை தேர்வில் கலந்து கொண்டவர்கள் | முதன்மை தேர்வுக்கு சென்றோர் | நேர்காணல் | பதவி பெற்றோர் |
|---|---|---|---|---|---|
| 2017 | 9,57,590 லட்சம் | 4,56,625 | 13,366 | 2568 | 990 |
| 2016 | 11 .36 லட்சம் | 4,59,659 | 15,452 | 2,961 | 1099 |
| 2015 | 9,45,908 | 4,65,882 | 15,008 | 2,797 | 1078 |
| 2014 | 9,47.428 | 4,46,623 | 16,286 | 3,308 | 1,236 |

ஆதாரம்: மத்திய அரசுப்பணியாளர் தேர்வாணைய ஆண்டறிக்கை

# இந்திய குடிமைப்பணித்தேர்வு அறிமுகம்

## இத்தேர்வுக்கான கல்வித்தகுதி என்ன?

இத்தேர்வுக்கான கல்வித்தகுதியானது ஏதாவது ஒரு இளங்கலைப் பட்டப்படிப்பு படித்திருந்தால் போதுமானது. இளங்கலைப் பட்டத்தினை நேரடியாகவோ அல்லது தொலைதூரக் கல்வி வாயிலாகவோ பட்டம் பெற்றிருக்க வேண்டும். கல்லூரி இறுதி ஆண்டு படிக்கும் மாணவர்களும் விண்ணப்பிக்கலாம் ஆனால் முதன்மைத் தேர்வின் போது கல்வித்தகுதிக்கான சான்றிதழ்களை சமர்ப்பிக்க வேண்டும்.

## தேர்வு முறை

1. முதல் நிலைத்தேர்வு கொள்குறி வகையில் அமைந்திருக்கும். இதில் தேர்வர்கள் பெறும் மதிப்பெண்களின் அடிப்படையில் முதன்மைத் தேர்வுக்கு அனுமதிக்கப்படுவர்

2. முதன்மைத் தேர்வு மற்றும் நேர்காணல். விரிவாக விடையளித்தல் மற்றும் நேர்காணல் மூலம் தேர்வர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்

முதல்நிலைத் தேர்வென்பது இரண்டு தாள்களை உள்ளடக்கியது. 400 மதிப்பெண்களுக்கான இத்தேர்வு கொள்குறி வகையாகும். இத்தேர்வானது இப்பணிக்கு தகுதியுடையவர்களை மட்டும் தேர்ந்தெடுக்கப்படும் நோக்கில் நடத்தப்படும். இத்தேர்வில் பெற்ற மதிப்பெண்களை வைத்துதான் தேர்வர்கள் முதன்மைத் தேர்வுக்கு தேர்ந்தெடுக்கப்படுவார்கள். ஆனால் இம்மதிப்பெண்கள் இறுதிக்கட்ட முடிவிற்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.

ஓராண்டில் நிரப்பப்படவேண்டிய காலியிடங்களின் எண்ணிக்கையைப் போல் 12 அல்லது 13 மடங்கு மாணவர்கள் முதன்மைத் தேர்வுக்கு தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்றவராக அறிவிக்கப்பட்ட நபர் அந்தாண்டு நடைபெறும் முதன்மைத் தேர்வை மட்டும் எழுத தகுதியுடையவராவார்.

## முதல் நிலைத்தேர்வின் அமைப்பு மற்றும் பாடத்திட்டம்

### முதல் நிலைத்தேர்வு

இரண்டு தாள்களை கொண்டது

தாள் ஒன்று– பொதுப்பாடம்

- தேசிய மற்றும் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த நடப்பு நிகழ்வுகள்
- இந்திய வரலாறு மற்றும் இந்திய தேசிய இயக்கம்
- இந்திய மற்றும் உலகப் புவியியல் (மேற்புற, பொருளாதர, சமூக)
- இந்திய அரசியலமைப்பு மற்றும் ஆட்சி முறை, பொதுக் கொள்கை, உரிமைகள், பஞ்சாயத்து ராஜ்,
- சமூக பொருளாதார மேம்பாடு, நிலைத்த வளர்ச்சி, வறுமை, சமூக மேம்பாட்டு நடவடிக்கைகள்
- சுற்றுச்சூழல், உயிரின வாழ்க்கைச் சூழல், பல்லுயிரன மேம்பாடு, பருவநிலை மாற்றம் தொடர்பான நிகழ்வுகள்.
- பொது அறிவியல்

## முதல் நிலைத்தேர்விற்கான அனுகுமுறை

### தேசிய மற்றும் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த நடப்பு நிகழ்வுகள்

இந்தப் பகுதியைப் பொறுத்தவரை தேர்வு நடைபெறுவதற்கு முந்தைய 12 மாதங்கள் அல்லது 16 மாதங்களுக்கு முன்பு நடந்த நிகழ்வுகளை அடிப்படையாக கொண்டிருக்கும்

### இந்திய வரலாறு மற்றும் இந்திய தேசிய இயக்கம்

இந்தப் பகுதியை பொருத்தவரை வினாக்களானது சமூக, பொருளாதாரம் மற்றும் அரசியல், கலை மற்றும் கலாச்சாரம் போன்ற பகுதிகளை அடிப்படையாகக் கொண்டு, பண்டைய , இடைக்கால மற்றும் நவீன வரலாற்றுப் பகுதியிலிருந்தும் அதே சமயம் 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நடைபெற்ற இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்தும் வினாக்கள் இடம்பெறும்.

### இந்திய மற்றும் உலக புவியியல்

இப்பகுதியைப் பொருத்தவரை இந்தியா மற்றும் உலகை அடிப்படையாகக் கொண்டு சமூக, பொருளதார மற்றும் பௌதீக புவியியல் பகுதிகளிலிருந்து வினாக்கள் இடம்பெறும். முக்கியமாக இந்திய புவியியலின் கூறுகளை அடிப்படையாகக் கொண்டே அதிக வினாக்கள் கேட்கப்படும் வாய்ப்பு அதிகம்

இந்திய அரசியலமைப்பு மற்றும் ஆட்சி முறை, பொதுக் கொள்கை, உரிமைகள், பஞ்சாயத்து ராஜ்

இப்பகுதியைப் பொருத்தமட்டில் பழைய வினாத்தாள்களை அடிப்படையாக கொண்ட பல்வேறு ஆய்வுப் பொருளை ஒட்டியே புதிய வினாக்கள் இடம்பெறும். அதே நேரத்தில் நடப்பு நிகழ்வுகளின் பின்புலத்தினை அடிப்படையாகக் கொண்ட வினாக்களும் கேட்கப்படும்.

சமூக பொருளாதார மேம்பாடு, நிலைத்த வளர்ச்சி, வறுமை, சமூக மேம்பாட்டு நடவடிக்கைகள்

இப்பகுதியில் அரசின் வளர்ச்சி தொடர்பான திட்டங்கள் மற்றும் கொள்கைகள் ஆகியவற்றினை அடிப்படையாக கொண்டு வினாக்கள் எழும். எனவே அரசின் பொருளாதார மேம்பாடு தொடர்பான நிகழ்வுகளை உன்னிப்பாக கவனிப்பதன் மூலம் வினாக்களை எதிர்கொள்ளலாம்.

சுற்றுச்சூழல், உயிரின வாழ்க்கைச் சூழல், பல்லுயிரன மேம்பாடு, பருவநிலை மாற்றம் தொடர்பான நிகழ்வுகள்

இப்பகுதியைப் பொருத்தவரை சுற்றுச்சூழல் மற்றும் பருவ நிலை மாறுபாட்டினை கட்டுப்படுத்துவதற்கு இந்தியா மற்றும் உலக அளவில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், ஒப்பந்தங்கள் மற்றும் நிறுவனங்கள் ஆகியவற்றிலிருந்தும் அதே வேளை பருவநிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் மாசுபாட்டின் விளைவுகளால் சூழ்நிலையியல் மற்றும் பல்லுயிரிகள் எவ்வாறு பாதிக்கபடுகின்றன என்பது தொடர்பான வினாக்களும் இடம்பெறும்

### பொது அறிவியல்

இப்பகுதியைப் பொறுத்தவரை, அடிப்படையான அறிவியலின் பகுதிகளான இயற்பியல், வேதியியல், உயிரியியல் பகுதிகளில் இருந்து வினாக்கள் எழும்

# இந்திய குடிமைப்பணித்தேர்வு அறிமுகம்

## தாள்-இரண்டு- CSAT

- புரிந்துகொள்ளும்திறன், நுண்ணறிவு,
- காரணகாரியம் பகுத்தாய்தல்
- முடிவெடுக்கும் மற்றும் பிரச்சினைகளை தீர்க்கும் திறன்
- பொதுவான அடிப்படை வாழ்வியல் கணக்குகள்
- அடிப்படை எண்கள்
- தகவல் பகுத்தாய்தல் (Data Interpretation)
- ஆங்கில திறன் (பத்தாம் வகுப்பு தரத்தில் இருக்கும்)

## பொதுவான தகவல்கள்

- வினாத்தாள்கள் ஆங்கிலம் மற்றும் ஹிந்தியில் மட்டுமே இருக்கும்
- ஒவ்வொரு வினாவிற்கும் கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் குறிப்பிடுவதாக இருக்கும்.
- தேர்வரால் தவறாக குறிக்கப்படும் விடைகளுக்கு மூன்றில் ஒரு பங்கு மதிப்பெண் விளைப்பயனாக (negative) குறைக்கப்படும்.
- தாள் இரண்டு தகுதித் தேர்வாக இருக்கும் அதாவது தாள் இரண்டின் மொத்த மதிப்பெண்ணில் %33 பெற்றிருந்தால் போதுமானது.

## CSAT

நுண்ணறிவுத் தேர்வினைப் பொருத்தவரை பல்வேறு விவாதங்கள் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது CSAT முறையானது குடிமைப் பணித்தேர்வைப் பொருத்தவரை ஒரு ஒழுங்கினை கொண்டு வந்துள்ளது இல்லையென்றால் முதல் நிலைத்தேர்வில் விருப்பப்பாடம் முக்கியப் பங்கு வகித்திருக்கும். CSAT தேர்வு வெறும் தகுதித் தேர்வாக ஆக்கப்பட்டதால் பொது அறிவு மட்டுமே இங்கே முக்கியத்துவம் பெறுகிறது. ஆயினும் CSAT தேர்வானது சமூகவியல், கலை அறிவியல் பாடம் படிப்பவர்கள் மற்றும் கிராமப் பகுதி மாணவர்களுக்கு பாதகமாகவும் அதே நேரம் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கல்வி படிப்போருக்கும் சாதகமாகவும் இருக்கின்றது என்ற குரல்களும் ஆங்காங்கே எழுகிறது. ஆனால் தகுதித் தேர்வாக இருப்பதால் கூடுதலாக முயற்சி செய்தால் போதுமானது தேவையற்ற அச்சம் தேவையில்லை.

## CSAT தேர்வுக்கு எவ்வாறு தயாராவது?

CSAT பகுதியைப் பொருத்தவரை ஒரு கடினமான தேர்வு என்றே பொதுவாக கருதப்படுகிறது ஆனால் தீவிரமாக இதனை உற்று நோக்கினால் இது ஒரு தவறான புரிதலாகும் இது முழுக்க முழுக்க ஒருவரின் திறன் சார்ந்த தேர்வாகும். குறிப்பாக வாசிப்பது, முடிவெடுத்தல், காரணகாரியம் பகுத்தறிதல் ஆகியவற்றைக் கொண்டிருக்கும் இவற்றை நாம் கற்றுக்கொள்ள வேண்டும். ஏனெனில் இந்த திறன்களை ஒருமுறை கற்றுக்கொண்டால் போதுமானது. மேலும் தற்போதைய தகவல் தொழில் நுட்ப யுகத்தில் தகல்களை விரல் நுனியில் பெற்றுவிடலாம் ஆனால் இது போன்ற திறன்களை கற்றுக் கொள்ள வேண்டும். குடிமைப் பணி அதிகாரிகளைப் பொருத்தவரை பணியில் சேர்ந்தபின் அதிகமான கோப்புக்களை வாசிக்க வேண்டி இருக்கும் இடர்பாட்டுச் சூழ்நிலைகளில் முக்கிய முடிவுகள் எடுக்க வேண்டியிருக்கும். அது போன்ற சமயங்களில் இத்திறன்கள் அவர்களுக்கு உதவலாம்.

தற்போது CSAT ஆனது தகுதித் தேர்வாக மாற்றப்பட்டுவிட்டது. ஆங்கில திறனை மேம்படுத்துவதற்கு முறையான வாசிப்புப் பயிற்சியைக் கொண்டு தயாராகலாம் ஏனென்றால் விரைவாக வாசிப்பதுடன் பொருளைப் புரிந்துகொள்வதும் தான் இப்பகுதியில் சிறப்பாக பதிலளிக்க இயலும் அதே போல் கணிதத் திறன் பகுதியைப் பொருத்தவரை வினாக்கள் பத்தாம் வகுப்பு தரத்திலே தான் இருக்கும் இதற்கு முறையான பயிற்சியை தொடர்ச்சியாக மேற்கொண்டாலே இந்த தாளில் %33 மதிப்பெண்களை எடுத்து விடலாம்.

## முதல் நிலைத் தேர்வுக்காக படிக்கவேண்டிய புத்தகங்கள்

### தாள் ஒன்று

- வரலாறு-CBSE- 11மற்றும் 12ஆம் வகுப்பு புத்தகங்கள், பண்டைய இந்தியா, இடைக்கால இந்தியா ஆர். எஸ். சர்மா, நவீன இந்தியா (தமிழில் நவீன இந்தியா வெங்கடேசன்)
- புவியியல் 11 மற்றும் 12 வது வகுப்பு CBSE பாடப்புத்தகங்கள், வரைபடம் ஒன்று
- இந்திய அரசியலமைப்பு லக்ஷ்மிகாந்த் (ஆங்கிலம்), லட்சுமிகாந்த், தமிழில் சந்திரசேகர் அல்லது டாக்டர் கே. வெங்கடேசன்
- இந்தியப்பொருளாதாரம், சங்கர் கனேஷ், மற்றும் இந்தியப் பொருளாதார ஆய்வறிக்கை, பிரதியோகிதா தர்பன் சிறப்பிதழ்
- இந்தியா ஆண்டு புத்தகம் மற்றும் LUCENT பொது அறிவுப்புத்தகம்
- சுற்றுச்சூழலியல், திறந்த நிலைப் பள்ளி புத்தகங்கள் (NIOS)
- செய்தித்தாள், தி இந்து அல்லது இந்தியன் எக்ஸ்பிரஸ், தமிழில் தினமணி மற்றும் தமிழ் இந்து நாளிதழ்
- DISHA PUBLICATION OLD QUESTION PAPER

### தாள் இரண்டு

- ஏதாவது ஒரு பதிப்பகத்தின் இரண்டாம் தாளுக்கான கையேடு, மற்றும் கேள்வித்தாள் தொகுப்பு.
- பழைய கேள்வித்தாள்களின் தொகுப்பு

## முதன்மைத் தேர்வு

முதன்மைத் தேர்வானது எழுத்துத் தேர்வு மற்றும் நேர்காணல் இரண்டையும் உள்ளடக்கியது. எழுத்துத் தேர்வைப் பொருத்தவரையில் விரிவாக விடையளிக்கும் வகையில் மொத்தம் ஒன்பது தாள்களை உள்ளடக்கியது. இதில் முதல் இரண்டு தாள்களான தாய்மொழிப்பாடம் மற்றும் ஆங்கில அறிவைச் சோதித்தல் ஆகியவற்றில் எடுக்கப்படும் மதிப்பெண் தரவரிசைப் பட்டியலுக்கு சேர்த்துக்கொள்ளப்படமாட்டாது. ஆனால் இத்தாள்களில் குறைந்தபட்ச மதிப்பெண் எடுத்து தேர்வாகி இருந்தால்தான் மற்ற விடைத்தாள்கள் திருத்தப்படும். முதன்மை எழுத்துத் தேர்வில் தேர்ச்சி பெறுவதற்கான குறைந்தபட்ச மதிப்பெண்களைப் பெற்ற தேர்வர்கள் தேர்வுக்குழுவின் அனுமதியோடு அவர்களின் ஆளுமைத்தன்மையை அறிய ஒரு நேர்காணலுக்கு உட்படுத்தப்படுவார்கள்.

முதன்மைத் தேர்வு, தேர்வர்களின் தகவல் அளிக்கும் திறன் மற்றும் நினைவுத் திறனை மதிப்பீடு செய்யாமல் அவர்களுடைய அறிவுசார்

WWW.IYACHAMY.COM

# இந்திய குடிமைப்பணித்தேர்வு அறிமுகம்

பண்புகளையும் புரிந்து கொள்ளும் திறனையும் மதிப்பீடு செய்வதாக அமைக்கப்பட்டுள்ளது. முதன்மைத் தேர்வின் விருப்பப் பாடத்தாள்களின் பாடத்திட்டமானது முதுகலை பட்டப்படிப்பிற்கு இணையாக இருக்கும். எடுத்துக்காட்டாக இளநிலை பட்டப்படிப்பின் அளவை விட உயர்வாகவும், முதுநிலைப் பட்டப் படிப்பை விட குறைவாகவும் இருக்கும். பொறியியல் மற்றும் சட்டப் படிப்புகளில் இதன் அளவு இளநிலை பட்டப் படிப்புக்கு இணையாக இருக்கும்.

| முதன்மைத் தேர்வு அமைப்பு | | |
|---|---|---|
| வ. எண் | பாடத்தலைப்பு | மதிப்பெண் |
| தாள் 1 | அரசியலமைப்பின் எட்டாவது அட்டவனையில் உள்ள ஏதாவது ஒரு மொழி (தாய்மொழி) | 300 |
| தாள் 2 | ஆங்கிலம் | 300 |
| தாள் 3 | கட்டுரைத் தாள் | 250 |
| தாள் 4 | பொது அறிவுத் தாள்: இந்தியப் பாரம்பரியம் மற்றும் பண்பாடு, வரலாறு, உலகப் புவியியல் மற்றும் சமுதாயம் | 250 |
| தாள் 5 | பொது அறிவுத்தாள் : ஆளுகை, அரசியலமைப்பு, ஆட்சி அமைப்பு முறை, சர்வதேச உறவுகள் மற்றும் சமூக நீதி | 250 |
| தாள் 6 | பொது அறிவுத்தாள் : தொழில் நுட்பம், பொருளாதார மேம்பாடு, பல்லுயிரின வேறுபாடு, சூற்றுச்சூழல், பாதுகாப்பு மற்றும் பேரிடர் மேலாண்மை | 250 |
| தாள் 7 | பொது அறிவுத்தாள்: அறவியல், நேர்மை மற்றும் மனப்பாங்கு | 250 |
| தாள் 8 | விருப்பப்பாடம் தாள் - 1 | 250 |
| தாள் 9 | விருப்பப்பாடம் தாள் - 2 | 250 |
| | மொத்தம் (எழுத்துத் தேர்வு) | 1750 |
| | நேர்காணல் 1750+(275) | 2025 |
| குறிப்பு முதல் இரண்டு தாள்களிலும் குறைந்த பட்ச மதிப்பெண் எடுத்தால் போதுமானது அவற்றில் பெற்ற மதிப்பெண்கள் தரவரிசைப் பட்டியலுடன் சேர்த்துக்கொள்ளப்படாது. | | |

## முதன்மைத் தேர்வை தமிழில் எழுத முடியுமா?

நிச்சயமாக முடியும். வினாத்தாள்கள் ஆங்கிலம் மற்றும் இந்தியில் மட்டுமே இருக்கும் ஆனால், தேர்வர் தாம் விரும்பும் மொழியில் அதாவது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் உள்ள எந்தவொரு மொழியிலும் எழுதலாம் தமிழிலும் எழுதலாம்.

ஆனால் கேள்விகளைப்புரிந்து கொள்ளக்கூடிய வகையில் குறைந்தபட்ச ஆங்கில புலமையாவது நமக்கு இருத்தல் வேண்டும். முதன்மைத் தேர்வை ஆங்கிலம் அல்லது தமிழில் எழுதலாம். எம்மொழியில் தேர்வு எழுதப்போகிறோம் என்பதை விண்ணப்பத்தை பூர்த்தி செய்யும் போது அவசியம் குறிப்பிட வேண்டும். முதன்மைத் தேர்விற்கு எம்மொழியை தேர்ந்தெடுக்கிறீர்களோ அதே மொழியில் தான் நேர்காணலும் நடைபெறும். ஆனால் சில சமயங்களில் நேர்காணல் நடத்தும் குழுவானது நேர்காணல் தருணத்தில் நாம் விரும்பும் மொழியை தேர்ந்தெடுக்கும் வாய்ப்பினை நல்கும். அவ்வாறு வாய்ப்பளிக்கப்படும் நேரத்தில் நீங்கள் ஆங்கிலத்தை தேர்ந்தெடுக்கலாம். பிற மொழியின் புலமையையும் ஆர்வத்தையும் எண்ணி பாராட்டுவார்கள். மேலும் உங்களுக்கு தன்னம்பிக்கை வளரும். நேர்காணலுக்கு ஆங்கிலம் மற்றும் தமிழில் தயார் செய்து கொள்வதின் மூலம் சூழ்நிலையை எளிதாக கையாளலாம் என்பது என்னுடைய அறிவுரை ஆகும்.

## தேர்வு எங்கு நடைபெறும்?

முதல் நிலைத்தேர்வானது, சென்னை, மதுரை, கோவை, திருச்சி, வேலூர் ஆகிய இடங்களில் நடைபெறும் ஆனால் முதன்மைத் தேர்வானது சென்னையில் நடைபெறும், நேர்காணல் தில்லியில் உள்ள மத்திய அரசுப் பணியாளார் தேர்வாணைய அலுவலகத்தில் நடைபெறும்.

## நேர்காணல் தேர்வு

நேர்காணல் நடைபெறுவதற்கு முன்பே ஆணையத்திடம் தெரிவு செய்யப்பட்டவர் பற்றிய முழு விவரப் பட்டியல் (Detailed Application form) இருக்கும். விண்ணப்பதாரரிடம் பொது ஈடுபாட்டின் பேரில் வினாக்கள் கேட்கப்படும். விண்ணப்பதாரரை தேர்ந்தெடுக்கும் தேர்வாணையாளர்கள் திறமை வாய்ந்தவர்களாகவும், பாராபட்சமில்லாதவர்களாகவும் இருப்பார்கள். இந்திய அரசுப் பணிக்கு ஏற்புடையவரா என்பதை மதிப்பீடு செய்வதே இதன் நோக்கமாகும்.

நேர்காணலானது தேர்வரின் மன ஆற்றலை தீர்மானிக்கும் வகையில் திட்டமிடப்படுகிறது. பொதுவாக கூறவேண்டுமானால், இத்தேர்வானது அறிவுத்திறனை மதிப்பீடு செய்வதல்ல. அவர்களின் சமூகப் பண்புகள் நடப்பு நிகழ்வுகளை தெரிந்து கொள்வதில் ஈடுபாடு போன்றவற்றை மதிப்பிடுகிறது. இதுவே மதிப்பீடு செய்யப்படும் முக்கியப் பண்புகளாகும்.

நேர்முகத் தேர்வு என்பது பணிநாடுநரின் முந்தைய எழுத்துத் தேர்வின் அடிப்படையிலோ பொது அறிவையோ (அ) தேர்ந்தெடுக்கப்பட்ட விருப்பப் பாட அறிவையோ சோதிப்பதாக அல்லாமல், அவர்களின் பொதுவான அறிவு மற்றும் தன்னைப் பற்றியும், தன்னுடைய மாநிலத்திலும் தேசத்திலும் உள்ளேயும், வெளியேயும் நடக்கும் நிகழ்வுகளைப் பற்றியும் புதுமையான நிகழ்வுகள் பற்றிய எண்ணங்கள் மற்றும் இளைய தலைமுறையினரின் புதிய முயற்சிகளை வெளிக்கொணரக்கூடிய ஆர்வத்தினை தூண்டுவதே நேர்காணலின் முக்கிய நோக்கமாகும். அதே சமயம் தேர்வரின் விரிவான விண்ணப்ப படிவத்தினை (DAF) ஒட்டியே நேர்காணல் தேர்வு அமைந்திருக்கும்.

# இந்திய குடிமைப்பணித்தேர்வு அறிமுகம்

## நேர்காணலில் தேர்வரிடமிருந்து எதிர்பார்ப்பது

- தெளிவாக பதிலை வெளிப்படுத்துதல்
- எளிமையாகக் கூறல் மற்றும் விவாதத்தினை முறையாக புரிந்து கொள்ளல்
- பகுத்தறிவுத் திறன்
- வெவ்வேறு கண்ணோட்டத்தில் நிகழ்வினை சமூக, பொருளாதார ரீதியில் அணுகுதல் அதுபற்றி விழிப்புணர்வு
- அதிக ஆர்வம் மற்றும் மக்களின் உணர்வுகள் தொடர்புடைய தனிப்பட்ட ஆக்கக் கூறுகள்
- ஆட்சிப் பணிக்கான நேர்காணல் என்பது ஆளுமைத் தேர்வு என்பதாகும். இதன் குறிக்கோள் பணிநாடுநரின் ஆளுமையை மதிப்பீடு செய்வதாகவும், அவர் திறமையான நிர்வாகத் தகுதி வாய்ந்தவரா, இல்லையா என்பதையும் மதிப்பிடுவதாகவும் இருக்கும். பணிநாடுனரின் அறிவுத்திறன் மட்டுமின்றி அவருடைய முழுமையான ஆளுமை வளர்ச்சி, நேர்மை, நாணயம், விழிப்புணர்வு, சமநிலைத் தேர்வு, கவனம், தலைமைப் பண்பு ஆகிய பண்புகளை மதிப்பிடுகிறது. ஆகையால் நேர்முகத் தேர்விற்கு சரியான முறையில் திட்டமிடல் அவசியம்.
- நேர்காணல் தேர்வுக்குழு பணிநாடுநரின் சில பண்புகளை உற்று நோக்கி அவர் ஆட்சிப் பணிக்குத் தகுதியானவரா? இல்லையா? என முடிவு செய்வார்கள். அதற்காக அவர்களின் நேர்மறை எண்ணங்கள் சமயோசித யுக்தி, தவறான எண்ணங்களுக்கு இடமளிக்காதவராகவும், இறுக்கமான சூழலலையும் கையாளும் திறன் உடையவராகவும் இருக்கிறாரா என்பதனை தேர்வுக்குழு உற்று நோக்கும்.
- நேர்முகத் தேர்வுக்கு தயார் செய்தல் என்பது ஒரு தொடர் நிகழ்வு. தயார் செய்தல் என்பது அதிகமான புத்தகங்கள், பத்திரிக்கைகள் குறைந்தபட்சம் இரண்டு செய்தி தாள்கள் ஆழ்ந்து படிப்பதாகும். ஒருவர் நல்ல உச்சரிப்புடன் கூடிய கலந்துரையாடல் திறனை வளர்த்துக் கொள்ள முயற்சி செய்தல் வேண்டும். தன்னைப் பற்றியும் தன்னுடைய பொழுது போக்கு பற்றியும் தன்னுடைய இதர திறமைகளைச் சார்ந்தும் கேட்கப்படும் கேள்விகளுக்கு பதிலளிக்க தயாராக இருத்தல் வேண்டும். நண்பர்களுடன் நடப்பு நிகழ்வுகள் பற்றியும், சமீபகால சம்பவங்கள் குறித்தும் ஆலோசிப்பது நல்ல பலனைத் தரும்.

## நேர்காணலில் பொதுவாக கேட்கப்படும் கேள்விகள்

- பணிநாடுநரின் பெயர் தொடர்பான பிரபலமான புகழ்பெற்ற நபர்கள் தொடர்பாக கேள்விகள்
- உங்களுடைய குறிக்கோள்/ குடிமைப் பணியைத் தேர்ந்தெடுக்க காரணம்
- உங்களுடைய பொழுதுபோக்குகள. ஏன் அந்த பொழுதுபோக்கினை தேர்ந்தெடுத்தீர்கள்.
- சமீபத்திய முக்கிய நிகழ்வுகள்/ சட்டமன்ற பாரளுமன்றத்திற்கு ஒரே நேரத்தில் தேர்தல்/ நிதிக்குழு தொடர்பானவை/ பெண்கள் மற்றும் குழந்தைகள் மீதான வன்முறை அதற்கு அரசு எடுத்த எதிர்வினை/ முக்கிய உச்ச நீதிமன்றத் தீர்ப்பு/ சிரியா விவகாரம்/ காமன்வெல்த் விளையாட்டுப் போட்டி (நீங்கள் நேர்கானல் செல்லும்போது மாறுபடலாம்)
- சமீபத்திய செய்திகள் உங்கள் விருப்பப் பாடத்தோடு தொடர்பிருந்தால்
- உங்கள் கல்வி சார்ந்த அறிவை எவ்வாறு பயன்படுத்திவீர்கள்
- சூழ்நிலை சார்ந்த கேள்விகள் (முக்கியமான சூழ்நிலைகளை வைத்து நீங்கள் அந்தப் பொருப்பில் இருந்தால் என்ன செய்வீர்கள் என்பது போன்ற)
- உங்கள் விண்ணப்பத்தில் நீங்கள் தெரிவித்த தகவல்கள் தொடர்பானவை
- உங்கள் சொந்த ஊர், மாவட்டம், மாநிலம் தொடர்பானவை

## முதன்மைத் தேர்வு பாடத்திட்டம்

### தாள் 1 – தாய்மொழி

### தாள் 2 – ஆங்கிலம்

### தாள் 3 – கட்டுரை

தேர்வர்கள் பல்வேறு தலைப்புகளின் கீழ் கட்டுரை எழுத வேண்டி இருக்கும். கேட்கப்பட்ட கட்டுரையின் தலைப்பை பொருத்தே தங்களின் எண்ணங்களை முறையான வரிசையில் சுருக்கமாக எழுதவேண்டும். ஆனால் நன்மதிப்பெண்கள் சரியான அர்த்தத்துடன் தெளிவான எழுத்து நடைக்கே வழங்கப்படும்.

## தாள் 4– பொதுத்தாள் –இந்திய பாரம்பரியம் மற்றும் பண்பாடு, வரலாறு மற்றும் உலகப் புவியியல் மற்றும் சமூகம்– Indian Heritage and Culture, History andGeography of the World and Society.

- Indian culture will cover the salient aspects of Art Forms, literature and Architecture from ancient to modern times
- இந்தியக் கலாச்சாரத்தின் சிறப்பம்சங்கள் மற்றும் பல்வேறு கலை வடிவங்கள், இலக்கியம், பழங்கால இந்தியா முதல் நவீன இந்தியா வரையுள்ள கட்டிடக் கலை
- Modern Indian history from about the middle of the eighteenth century until the present- significant events, personalities, issues.
- 18 ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்திலிருந்து நவீன இந்தியா வரலாறு நிகழ்காலம் வரை– முக்கிய நிகழ்வுகள்– முக்கிய நபர்கள்
- The Freedom Struggle - its various stages and important contributors/contributions from different parts of the country.
- இந்திய விடுதலைப்போராட்ட வரலாறு– அதன் பல்வேறு நிலைகள் – விடுதலைப் போராட்டத்தில் முக்கியப் பங்காற்றியவர்கள்– இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்து விடுதலைப் போராட்டத்திற்கான பங்களிப்பு.

- Post-independence consolidation and reorganization within the country.
- சுதந்திரத்திற்கு பிந்தைய இந்தியக் கட்டமைப்பு- இந்தியாவுக்குள் மாநிலங்களின் ஒருங்கிணைப்பு
- History of the world will include events from 18th century such as industrial revolution, world wars, redrawal of national boundaries, colonization, decolonization, political philosophies like communism, capitalism, socialism etc. their forms and effect on the society.
- 18 ஆம் நூற்றாண்டிலிருந்து உலக வரலாற்றின் முக்கிய நிகழ்வுகளான தொழில் புரட்சி, உலகப் போர்கள், பல்வேறு நாட்டின் எல்லைகள் மறுவரைவு, காலனியாதிக்கம், அரசியல் தத்துவங்கள், பொதுவுடைமை, முதலாளித்துவம், சமதர்மம் போன்றவைகள் மற்றும் அவற்றின் பல்வேறு வடிவங்கள் சமூகத்தில் அவைகள் ஏற்படுத்திய தாக்கம்.
- Salient features of Indian Society, Diversity of India.
- இந்திய சமூகத்தின் சிறப்பியல்புகள், வேற்றுமையில் ஒற்றுமை
- Role of women and women's organization, population and associated issues, poverty and developmental issues, urbanization, their problems and their remedies.
- மகளிர் மற்றும் மகளிர் நிறுவனங்களின் பங்களிப்பு- மக்கள்தொகை மற்றும் அதனோடு தொடர்புடைய நிகழ்வுகள், வறுமை மற்றும் மேம்பாட்டு நிகழ்வுகள், நகர்மயமாதல்- பிரச்சனைகள் மற்றும் அதற்கான தீர்வுகள்.
- Effects of globalization on Indian society.
- உலகமயமாக்கலின் விளைவாக இந்திய சமூகத்தில் ஏற்பட்ட தாக்கம்
- Social empowerment, communalism, regionalism & secularism.
- சமூக அதிகாரமளித்தல், வகுப்புவாதம், பிராந்தியவாதம், சமயச்சார்பின்மை
- Salient features of world's physical geography.
- உலக பௌதீக புவியியலின் சிறப்பம்சங்கள்
- Distribution of key natural resources across the world (including South Asia and the Indian sub-continent); factors responsible for the location of primary, secondary, and tertiary sector industries in various parts of the world (including India).
- உலகில் பல்வேறு பகுதிகளில் உள்ள முக்கிய இயற்கை வளங்கள். (தெற்காசிய மற்றும் இந்திய துணைக்கண்டமும் உள்ளடக்கம்). முதல் நிலை, இரண்டாம் நிலை, துனை நிலைத் தொழில்கள் அமைவிடக் காரணிகள் (இந்தியாவும் சேர்த்து).
- Important Geophysical phenomena such as earthquakes, Tsunami, Volcanic activity, cyclone etc. geographical features and their location-changes in critical geographical features (including water-bodies and ice-caps) and in flora and fauna and the effects of such changes.
- முக்கிய பௌதீக புவி அமைப்பின் சிறப்புத் தன்மைகள் அதாவது நிலநடுக்கம், சுனாமி, எரிமலைச் செயல்பாடுகள், சூறாவளிகள் போன்றவை. புவியியல் சிறப்பம்சங்கள் மற்றும் அதன் அமைவிடங்கள்(நீர் நிலைகள் மற்றும் பனி மலைகள்) தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் அவற்றின் மாற்றங்கள் மற்றும் தாக்கங்கள்.

## தாள் 5- பொதுத்தாள்- ஆளுகை, அரசியலமைப்பு, ஆட்சி அமைப்பு முறை, சமூக நீதி மற்றும் சர்வதேச உறவுகள்.

### Governance, Constitution, Polity, Social Justice and International relations.

- Indian Constitution historical underpinnings, evolution, features, amendments, significant provisions and basic structure.
- இந்திய அரசியலமைப்பு- வரலாற்றுடனான கட்டமைப்பு- அரசியலமைப்பின் வளர்ச்சி-சிறப்பம்சங்கள், அரசியலமைப்பு திருத்தங்கள்- சிறப்பு வாய்ந்த சட்டப்பிரிவுகள் மற்றும் அடிப்படைக் கட்டமைப்பு.
- Functions and responsibilities of the Union and the States, issues and challenges pertaining to the federal structure, devolution of powers and finances up to local levels and challenges therein.
- மத்திய மற்றும் மாநில அரசுகளின் செயல்பாடுகள் மற்றும் பொறுப்புகள்-கூட்டாட்சி அமைப்பு தொடர்பான சவால்கள் மற்றும் பிரச்சனைகள்-உள்ளாட்சி அமைப்புகளுக்கான அதிகாரம் மற்றும் நிதிப் பகிர்வு தொடர்பான சவால்கள்.
- Separation of powers between various organs dispute redressal mechanisms and institutions.
- அரசியலமைப்பின் பல்வேறு அங்கங்களுக்கிடையான அதிகாரப்பகிர்வு-தகராறுகளைத் தீர்த்தலுக்கான இயந்திர நுட்பம் (mechanisms) மற்றும் அமைப்புக்கள்.
- Comparison of the Indian constitutional scheme with that of other countries.
- இந்திய அரசியலமைப்புத் திட்டத்தை உலகின் பிற நாட்டு அரசமைப்புத் திட்டங்களோடு ஒப்பீடு செய்தல்.
- Parliament and State legislatures structure, functioning, conduct of business, powers & privileges and issues arising out of these.
- பாராளுமன்றம் மற்றும் மாநிலச் சட்ட மன்றம்- அமைப்பு- செயல்பாடு- அலுவல்கள் நடைபெறும் விதம்- அதிகாரங்கள் மற்றும் சலுகைகள் மற்றும் இவற்றிலிருந்து எழும் பூசல்கள்
- Structure, organization and functioning of the Executive and the Judiciary Ministries and Departments of the Government; pressure groups and formal/informal associations and their role in the Polity.

WWW.YACHAM.COM YACHAM ACADEMY CHENNAI Your Future

# இந்திய குடிமைப்பணித்தேர்வு அறிமுகம்

- செயலாட்சித் துறை மற்றும் நீதித்துறையின் கட்டமைப்பு முறை, செயல்பாடுகள்–அரசின் அமைச்சகங்கள் மற்றும் துறைகள்– முறைசார், முறைசாரா அழுத்தக்குழுக்கள் மற்றும் அமைப்புகள் போன்றவை ஆட்சியமைப்பு முறையில் பங்களிப்பு.
- Salient features of the Representation of People's Act.
- மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் சிறப்பம்சங்கள்
- Appointment to various Constitutional posts, powers, functions and responsibilities of various Constitutional Bodies.
- பல்வேறு அரசியலமைப்பு பதவிகளின் நியமனங்கள், அதிகாரங்கள், அரசியலமைப்பு நிறுவனங்களின் அதிகாரங்கள்–செயல்பாடுகள் மற்றும் பொறுப்புகள்
- Statutory, regulatory and various quasi-judicial bodies.
- சட்டமுறை நிறுவனங்கள், ஒழுங்குமுறை நிறுவனங்கள் மற்றும் நீதிச்சார்புடைய அமைப்புக்கள்.
- Government policies and interventions for development in various sectors and issues arising out of their design and implementation.
- பல்வேறு துறைகளில் வளர்ச்சிக்கான அரசின் கொள்கைகள் , தலையீடுகள் மற்றும் அவற்றை உருவாக்குதல், செயல்படுத்துதல் போன்றவற்றில் எழும் பிரச்சனைகள்.
- Development processes and the development industry the role of NGOs, SHGs, various groups and associations, donors, charities, institutional and other stakeholders.
- வளர்ச்சிக்கான செயலாக்கம் மற்றும் தொழில்துறை வளர்ச்சி–தொண்டு நிறுவனங்கள் மற்றும் சுய உதவிக் குழுக்கள் போன்ற பல்வேறு, அமைப்புக்கள், கொடையாளர்கள், நிறுவனங்கள் மற்றும் பங்கேற்பாளர்கள் போன்றவர்களின் பங்களிப்பு
- Welfare schemes for vulnerable sections of the population by the Centre and States and the performance of these schemes; mechanisms, laws, institutions and Bodies constituted for the protection and betterment of these vulnerable sections.
- நலிவடைந்த பிரிவினருக்கான மத்திய மற்றும் மாநில அரசின் நலத்திட்டங்கள் மற்றும் அவற்றின் செயலாக்கம், நுட்பங்கள், சட்டங்கள்– நலிவடைந்த பிரிவினரின் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டுக்காக அமைக்கப்பட்ட அமைப்புக்கள் மற்றும் நிறுவனங்கள் போன்றவை.
- Issues relating to development and management of Social Sector/Services relating to Health, Education, Human Resources.
- சமுதாயத் துறைகள் சார்ந்த மேம்பாடு மற்றும் மேலாண்மை தொடர்பான சிக்கல்கள்–மனித வளம், மருத்துவம், கல்வி போன்ற சேவைகள்.
- Issues relating to poverty and hunger.
- வறுமை மற்றும் பட்டினி தொடர்பான பிரச்சனைகள்.
- Important aspects of governance, transparency and accountability, e-governance- applications, models, successes, limitations, and potential; citizens charters, transparency & accountability and institutional and other measures.
- ஆளுகையின் முக்கிய கூறுகள், வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புடைமை– மின் ஆளுகை– பயன்பாடுகள்– மாதிரிகள் – வெற்றிகள்– வரையறைகள் மற்றும் வருங்கால வாய்ப்பு– குடிமக்கள் சாசனம்–வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புடைமை மற்றும் நிறுவனங்கள் மேலும் பல இது தொடர்பான நடவடிக்கைகள்.
- Role of civil services in a democracy.
- மக்களாட்சியில் குடிமைப்பணிகளின் பங்களிப்பு
- India and its neighborhood- relations.
- இந்தியாவும் அதன் அண்டை நாட்டு உறவுகளும்
- Bilateral, regional and global groupings and agreements involving India and/or affecting India's interests.
- இருதரப்பு உறவுகள்–பிராந்திய மற்றும் உலகளாவிய குழுமச் செயல்பாடுகளில் இந்தியாவின் ஈடுபாடு மற்றும் ஒப்பந்தங்கள் அல்லது இந்தியாவின் நலனில் ஏற்படுத்தும் தாக்கம்
- Effect of policies and politics of developed and developing countries on India's interests, Indian diaspora.
- வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளின் கொள்கைகள் மற்றும் அரசியல் போன்றவை இந்திய நலனில் ஏற்படுத்தும் தாக்கம்– புலம்பெயர்ந்த இந்தியர்கள்.
- Important International institutions, agencies and fora- their structure, mandate.
- முக்கியத்துவம் வாய்ந்த சர்வதேச நிறுவனங்கள், முகமைகள் மற்றும் மன்றங்கள் ஆகியவற்றின் அமைப்பு மற்றும் ஆணைகள்.

## பொதுத்தாள்-6 பொது அறிவுத்தாள் : தொழில் நுட்பம், பொருளாதார மேம்பாடு, பல்லுயிரின வேறுபாடு, சூற்றுச்சூழல், பாதுகாப்பு மற்றும் பேரிடர் மேலாண்மை Technology, Economic Development, Bio diversity, Environment, Security and Disaster Management

- **Indian Economy and issues relating to planning, mobilization, of resources, growth, development and employment.**
- இந்தியப் பொருளாதாரம் மற்றும் திட்டமிடுதல் தொடர்பான பிரச்சனைகள்– வளங்களை திரட்டல்–வளர்ச்சி, மேம்பாடு மற்றும் வேலை வாய்ப்பு

- Inclusive growth and issues arising from it.
- அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் இதிலிருந்து எழும் பிரச்சனைகள்
- Government Budgeting.
- அரசின் நிதிசார்ந்த திட்டமிடல்
- Major crops-cropping patterns in various parts of the country, - different types of irrigation and irrigation systems storage, transport and marketing of agricultural produce and issues and related constraints; e-technology in the aid of farmers.
- முக்கியப் பயிர்கள்- நாட்டின் பல்வேறு பகுதிகளில் பயிரிடுதல் முறைகள்- பல்வேறு வகையான நீர்ப்பாசன வகைகள் மற்றும் நீர்பாசன சேமிப்பு முறைகள்- வேளாண் பொருட்களுக்கான போக்குவரத்து வசதி மற்றும் சந்தைப்படுத்துதலில் உள்ள பிரச்சனைகள் மற்றும் அது தொடர்பான தடைகள்- விவசாயிகளுக்கு உதவக்கூடிய மின் தொழில் நுட்பங்கள்
- Issues related to direct and indirect farm subsidies and minimum support prices; Public Distribution System- objectives, functioning, limitations, revamping; issues of buffer stocks and food security; Technology missions; economics of animal-rearing.
- நேரடி மற்றும் மறைமுக பண்ணை மானியங்கள் தொடர்பான பிரச்சனைகள் மற்றும் குறைந்தபட்ச ஆதரவு விலைகள் - பொது விநியோகத்திட்டம்- நோக்கங்கள்-செயல்பாடுகள்-வரையறைகள்-புதுப்பித்தல்-உணவுப் பாதுகாப்பு மற்றும் கையிருப்பு தானியங்கள் தொடர்பான பிரச்சனைகள்-தொழில்நுட்ப செயல்திட்டம்-விலங்குகள் வளர்ப்பின் பொருளாதாரம்.
- Food processing and related industries in India- scope' and significance, location, upstream and downstream requirements, supply chain management.
- இந்தியாவில் உணவுப் பதப்படுத்துதல் தொடர்பான தொழிற்சாலைகள்-இலக்கு-தனிமுறைச் சிறப்பு-அமைவிடம்- ஏற்ற இறக்கங்கள்- தேவைகள்- அளிப்பு சங்கிலி மேம்பாடு.
- Land reforms in India.
- இந்தியாவில் நிலச்சீர்திருத்தங்கள்
- Effects of liberalization on the economy, changes in industrial policy and their effects on industrial growth.
- உலகமயமாக்கலின் விளைவாக இந்தியப் பொருளாதாரத்தின் மீதான தாக்கம்-தொழில் கொள்கையில் மாற்றம் மற்றும் தொழில் வளர்ச்சியில் அதன் விளைவுகள்
- Infrastructure: Energy, Ports, Roads, Airports, Railways etc.
- அடிப்படைக் கட்டமைப்புக்கள்-ஆற்றல்-துறைமுகங்கள்-சாலைகள்-விமான நிலையங்கள்-இரயில்வே மற்றும் பல.
- Investment models.
- மூலதன மாதிரிகள்
- Science and Technology- developments and their applications and effects in everyday life.
- அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மேம்பாடு-மேம்பாடு மற்றும் அன்றாட வாழ்வில் இவற்றின் பயன்பாடுகள் மற்றும் ஏற்படுத்திய தாக்கங்கள்.
- Achievements of Indians in science & technology; indigenization of technology and developing new technology.
- அறிவியல் தொழில்நுட்பத்தில் இந்தியர்களின் சாதனைகள்-தொழில்நுட்பத்தில் உள்நாட்டுத் தயாரிப்பு மற்றும் புதிய தொழில்நுட்பங்களை மேம்படுத்துதல்.
- Awareness in the fields of IT, Space, Computers, robotics, nano-technology, bio-technology and issues relating to intellectual property rights.
- தகவல் தொழில்நுட்பம், விண்வெளி, கணிணிகள், எந்திரனியல், நானோ தொழில்நுட்பம், உயிரித் தொழில்நுட்பம் ஆகியவற்றில் விழிப்புணர்வு- மற்றும் தொடர்பான பிரச்சனைகள் மேலும் அறிவுசார் சொத்துரிமை.
- Conservation, environmental pollution and degradation, environmental impact assessment.
- இயற்கைவளம் பேணல், சுற்றுச்சூழல் மாசுபாடு மற்றும் சீர்கேடுகள்-சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீடு
- Disaster and disaster management.
- பேரிடர் மற்றும் பேரிடர் மேலாண்மை
- Linkages between development and spread of extremism.
- வளர்ச்சிக்கும் மற்றும் தீவிரவாத பரவலுக்குமான தொடர்பு
- Role of external state and non-state actors in creating challenges to internal security.
- உள்நாட்டுப் பாதுகாப்பில் சவால்களை ஏற்படுத்துவதில் வெளிநாட்டு அரசு சார்ந்த/சாராத நபர்கள்/ நிறுவனங்களின் பங்களிப்பு
- Challenges to internal security through communication networks, role of media and social networking sites in internal security challenges, basics of cyber security; money-laundering and its prevention.
- தொலைத்தொடர்பு பின்னலின் மூலம் உள் நாட்டுப் பாதுகாப்பில் சவால்களை ஏற்படுத்துதல், உள்நாட்டுப் பாதுகாப்பில் சவால்களை ஏற்படுத்தும் ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்கள்-இணையவெளிப்பாதுகாப்பின் அடிப்படை புரிதல்-பணப்பதுக்கல் மற்றும் முன்தடுப்பு

- Security challenges and their management in border areas - linkages of organized crime with terrorism.

- எல்லைப் பகுதி பாதுகாப்பில் உருவாகும் சவால்கள் மற்றும் மேலாண்மை- திட்டமிடப்பட்ட குற்றங்களுக்கும் தீவிரவாதத்திற்குமிடையேயான தொடர்பு

- Various Security forces and agencies and their mandate.

- பல்வேறு வகையான பாதுகாப்பு படைகள் மற்றும் முகமைகள் மற்றும் அவற்றின் பணிகள்.

## பொது அறிவுத்தாள் 7: அறவியல், நேர்மை மற்றும் மனப்பாங்கு- Ethics, Integrity and Aptitude

This paper will include questions to test the candidates' attitude and approach to issues relating to integrity, probity in public life and his problem solving approach to various issues and conflicts faced by him in dealing with society. Questions may utilise the case study approach to determine these aspects. The following broad areas will be covered

இந்தப் பகுதியில் இடம்பெறும் வினாக்கள் தேர்வரின் மனப்பாங்கு மற்றும் நேர்மை, ஒழுக்கம், நாணயம் மற்றும் மனப்பாங்கு ஆகியவற்றை பொதுச்சேவையில் அவர் எவ்வாறு அணுகுகிறார் என்பதனையும் பல்வேறு சிக்கலான சூழ்நிலைகளை சமூகத்துடன் எதிர்கொண்ட போது அவர் வினையாற்றிய விதம் மற்றும் முடிவெடுத்தல் திறன் ஆகியவற்றை பரிசோதிக்கும் வகையிலும் இருக்கும். வினாக்கள் நிகழாய்வு (Case study) எதிர்கொள்ளுதல் போன்ற கூறுகளைக் கொண்டிருக்கும்.

- Ethics and Human Interface: Essence, determinants and consequences of Ethics in-human actions; dimensions of ethics; ethics - in private and public relationships. Human Values - lessons from the lives and teachings of great leaders, reformers and administrators; role of family society and educational institutions in inculcating values.

- அறவியல் மற்றும் மனித தொடர்பு-அறவியலின் அடிப்படை மற்றும் மனிதச் செயல்பாடுகளில் அற இயலின் விளைவுகள்- அற இயலின் பரிணாமங்கள்- பொது மற்றும் தனியார் தொடர்பில் அற இயல்-மனித விழுமியங்கள்-சொந்த வாழ்க்கையிலிருந்து கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் சிறந்த தலைவர்கள், சீர்திருத்தவாதிகள் மற்றும் நிர்வாகிகளின் போதனைகள்-மனித விழுமியங்களை கற்பிப்பதில் குடும்பம், சமுதாயம் மற்றும் கல்வி நிறுவனங்களின் பங்களிப்பு.

- Attitude: content, structure, function; its influence and relation with thought and behaviour; moral and political attitudes; social influence and persuasion.

- மனப்பாங்கு-உட்பொருள், அமைப்பு மற்றும் செயல்பாடுகள்-சிந்தனை மற்றும் செயல்பாடுகளின் உறவில் மனப்பாங்கின் செல்வாக்கு- நேர்மை சார்ந்த மற்றும் அரசியல் மனப்பாங்கு சமூகச்செல்வாக்கு மற்றும் கொள்கைப் பற்று.

- Aptitude and foundational values for Civil Service, integrity, impartiality and non-partisanship, objectivity, dedication to public service, empathy, tolerance and compassion towards the weaker-sections.

- குடிமைப் பணிகளுக்கான மனப்பாங்கு மற்றும் விழுமியங்கள்-பொதுச்சேவை சார்ந்த அர்ப்பணிப்புடன் கூடிய நேர்மை, நடுநிலைத்தன்மை மற்றும் பாகுபாடற்ற தன்மை நோக்கம் ஆகியன-பச்சாதாபத்துடன் கூடிய சகிப்புத் தன்மை மற்றும் நலிவுற்ற பிரிவினருக்கான இரக்க உணர்வு.

- Emotional intelligence-concepts, and their utilities and application in administration and governance.

- உணர்ச்சிவயப்பட்ட அறிவுத்திறன் - பொதுவான கருத்து - நிர்வாகம் மற்றும் ஆளுகையில் இதன் பயன்பாடுகள்.

- Contributions of moral thinkers and philosophers from India and world.

- இந்திய மற்றும் சர்வதேச நெறிமுறைச் சிந்தனையாளர்கள் மற்றும் தத்துவவாதிகள்- அவர்களுடைய பங்களிப்பு

- Public/Civil service values and Ethics in Public administration: Status and problems; ethical concerns and dilemmas in government and private institutions; laws, rules, regulations and conscience as sources of ethical guidance; accountability and ethical governance; strengthening of ethical and moral values in governance; ethical issues in international relations and funding; corporate governance.

- பொதுச்சேவையில் விழுமியங்கள்-பொது நிர்வாகத்தில் அற இயலின் தன்மை மற்றும் சிக்கல்கள்- நெறிமுறைகள் தொடர்பான குழப்பநிலை அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில்-சட்டங்கள்-விதிகள்-ஒழுங்குமுறைகள் மற்றும் மனச்சான்றுக்கு கட்டுப்பட்ட நிலைகள் ஆகியவை நெறிமுறைகளின் வழிகாட்டிகள்-பொறுப்புடைமை மற்றும் நெறிமுறை சார்ந்த ஆளுகை- ஆளுகையில் நெறிமுறை சார்ந்த மற்றும் நேர்மை சார்ந்த விழுமியங்களைப் பலப்படுத்துதல்-சர்வதேச உறவில் நெறிமுறைகள் சார்ந்த சிக்கல்கள்-சட்டமுறையான ஆளுகைக்கு நிதியுதவி போன்றவை.

- Probity in Governance: Concept of public service; Philosophical basis of governance and probity; Information sharing and transparency in government, Right to Information, Codes of Ethics, Codes of Conduct, Citizen's Charters, Work culture, Quality of service delivery, Utilization of public funds, challenges of corruption.

- ஆளுகையில் நேர்மை-பொதுச்சேவையின் பொதுக்கருத்து-பகுத்தறிவுச் சிந்தனை சார்ந்த ஆளுகை மற்றும் நேர்மை-தகவல்களைப் பகிர்தல் மற்றும் அரசின் வெளிப்படைத் தன்மை-தகவல் அறியும் உரிமை- நெறிமுறைகளின் தொகுப்பு- நடத்தை விதிகளின் தொகுப்பு-குடிமக்கள் சாசனம்-பணிக் கலாச்சாரம்-சேவையைக் கொண்டு சேர்ப்பதின் பண்பு- பொதுப்பணத்தை பயன்படுத்துதல்- ஊழலுக்கான சவால்கள்.

- Case Studies on above issues.

- மேலே கூறப்பட்டவைகளின் நிகழாய்வு தொடர்பானவை

# இந்திய குடிமைப்பணித்தேர்வு அறிமுகம்

## தாள் 8 மற்றும் 9 – விருப்பப்பாடம்

கீழ்க்கண்ட பட்டியல்களுள் ஏதேனும் ஒரு பாடத்தினை தேர்ந்தெடுக்கலாம். அந்த பாடத்திலிருந்து இரண்டு தாள்கள் இருக்கும்.

## விருப்பப் பாடத்தின் பட்டியல்கள்

வேளாண்மை/ விலங்குகளைப் பேணிக் காத்தல் – கால்நடை அறிவியல் /மானிடவியல் / தாவரவியல் / வேதியியல் / கட்டிட பொறியியல் / வணிகம் மற்றும் கணக்கியல் / பொருளாதரம் / மின்னனு பொறியியல் /புவியியல் /மண்ணியல் / வரலாறு / சட்டம் / மேலாண்மை / கணிதம் / இயந்திரவியல் /மருத்துவ அறிவியல் / தத்துவம் / இயற்பியல் / அரசியல் அறிவியல் / பன்னாட்டு உறவு முறைகள் /மனோ தத்துவம் / பொது நிர்வாகம் / சமூகவியல் /புள்ளியியல் / விலங்கியல்

## முதன்மைத் தேர்வு வினாக்களின் பல்வேறு வகைகள்

| | |
|---|---|
| வரையறை (Define) | பொருளின் எல்லையை தெரிவுபடுத்துதல் அதாவது, வினாவானது ஏற்கனவே வரையறை செய்யப்பட்ட ஒரு பொருளை உள்ளது உள்ளவாறு எழுதுவது ஆகும். |
| விளக்கவுரை (describe) | பொருளினைப் பற்றிய முழு விவரத்தினையும் விளக்கமாக தெரிவித்தல் என்பது ஆகும் |
| விவாதித்தல் (Discuss) | ஒரு பொருளினை மிக தெளிவாக ஆராய்ந்து சாதக மற்றும் பாதகமான அம்சங்களை குறிப்பிட்டு முடிவில் ஒரு தெளிவான முடிவுரையை கொண்டிருக்குமாறு எழுதுவது ஆகும் |
| விளக்கம் (Explain) | பொருளினை ஏன் மற்றும் எதற்காக நிகழ்ந்தது என முறையாக விளக்கிக் கூறுதலும், கருத்துக்களை புரியும்படி கூறுதல் மற்றும் அந்தப் பொருளோடு தொடர்புடைய பல்வேறு நிகழ்ச்சிகளை தெளிவு பட எழுதவேண்டும். |
| விரிவாகக் கூறல் (elaborate) | கேட்கப்பட்ட பொருளினை நுட்பமாகவும் கூடுதல் தகவல்களுடனும் எழுதுவது. |
| செயல்விளக்கம் (Demonstrate) | கேட்கப்பட்ட பொருள் தொடர்பான தகவல்களை எடுத்துக் காட்டுடன் தெளிவாக எழுதுதல் ஆகும் |
| பகுத்துரைத்தல் (Analyse) | கேட்கப்பட்ட பொருளினை தனித்தனிக் கூறுகளாகப் பிரித்து அதற்கு துணைபுரியக் கூடிய வாதங்களையும் அதே நேரத்தில் பொருளின் எதிர் வாதங்களையும், ஒன்றோடொன்று எவ்வாறு தொடர்புடையது என்பதனையும் எழுதுவேண்டும். |
| மதிப்பீடு (Access) | பொருள் எந்த அளவில் உண்மைத் தன்மையுடன் கூறப்பட்டுள்ளது மேலும் அது தொடர்பான ஆய்வுத் தரவுகளையும் மற்றும் பொருளில் உள்ள குறைகள் மற்றும் எதிர்வாதங்களையும் குறிப்பிட்டு பொருளின் உண்மைத் தன்மையோடு எந்த அளவில் ஒத்துப் போகின்றீர்கள் என்பதையும் தெரிவிக்க வேண்டும். |
| ஒப்பீடு (Compare) | ஒரு பொருளின் குறிப்பிடத்தக்க ஒத்த தன்மைகள் மற்றும் மாறுபட்ட தன்மைகளை ஒப்பிட்டு ஒத்த தன்மைகள் மற்றும் வேறுபட்ட தன்மைகளை கூறல் ஆகும் |
| வேறுபடுத்து (Contrast) | பொருளை ஒப்பீடு செய்ததைப் போன்றது தான் ஆனால் பொருட்களின் வேறுபாட்டை தனியே வேறுபடுத்தி ஒன்றிலிருந்து மற்றொன்று எவ்வாறு வேறுபட்டது எனவும் அந்த வேறுபாட்டில் முக்கியத்துவம் வாய்ந்தனவற்றையும் குறிப்பிட வேண்டும். |
| ஆராய்தல் (Examin) | தேர்ந்தெடுத்த பொருளின் முக்கிய அம்சங்களை அது தொடர்பான கூடுதல் தகவல்களையும் நிறுவி நீங்கள் தேர்ந்தெடுத்த தகவல்கள் ஏன் முக்கியமானவையாக கருதுகிறீர்கள் எனவும் அதேபோல் வேறு எவ்வகையில் இதனை விளக்கமுடியும் எனத் தெரிதல் வேண்டும். |
| கருத்துரைத்தல் (comment upon) | ஒரு பொருளின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தி அதன் மீது உங்களது கருத்துக்களை தெரிவித்து நீங்கள் தெரிவித்த கருத்தினை பலப்படுத்துமாறு ஆதாரங்களையும் தரவுகளையும் அதற்கான காரண காரியங்களையும் முன்வைத்து எழுத வேண்டும். |
| விவரித்தல் (Give an account of) | ஏதாவது ஒரு பொருளினைப் பற்றி விவரமாக விளக்கி ஏன் எவ்வாறு நடைபெற்றது என எழுத வேண்டும். |
| திறனாய்வுடன் கூடிய மதிப்பீடு (Critically evaluate) | ஒரு குறிப்பிட்ட ஆராய்ச்சிப் பகுதியில் ஏதேனும் ஒரு பொருளை குறிப்பிட்டு எந்த அளவுக்கு அந்தப் பொருளின் சாராம்சத்துடன் ஒத்துப் போகிறீர்கள் என தீர்மானம் செய்து அதனை ஒத்துக்கொண்டு அல்லது எதிர் கருத்தை தெரிவித்து ஏன் என அதற்கான சான்றினை தகுந்த ஆதாரங்களுடன் வழங்கி ஒரு இறுதி முடிவிற்கு வரவேண்டும். அந்த முடிவினை எவ்வாறு எடுத்தீர்கள் என்பதையும் அந்த முடிவினை எடுப்பதற்கான முக்கிய காரணிகள் எது எனவும் மெய்ப்பிக்க வேண்டும். |

# இந்திய குடிமைப்பணித்தேர்வு அறிமுகம்

## பொதுவாக ஏற்படும் சந்தேகங்கள்

### வயது மற்றும் எத்தனை முறை தேர்வெழுதலாம்?

| பிரிவு | அதிக பட்ச வயது | வாய்ப்புகள் (எத்தனை முறை எழுதலாம்) |
|---|---|---|
| OC பொதுப்பிரிவினர் | 32 | 6 முறை |
| OBC-இதர பிற்படுத்தப்பட்டோர் | 35 | 9 முறை |
| தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் SC/ST | 37 | 37 வயது வரை எத்தனை முறை வேண்டுமானாலும் எழுதலாம் |
| மாற்றுத்திறனாளிகள், | 42=10+32 | • பொதுப்பிரிவினர் 9 முறை<br>• OBC 9 முறை<br>• SC/ST உச்சபட்ச வயது வரம்பு வரை |

குறிப்பு: (தமிழ் நாட்டில் BC, MBC, DNC பிரிவுகள் இதர பிற்படுத்தப்பட்டோர் பிரிவில் அடங்கும்)

### இத்தேர்வினை எதிர்கொள்ள பயிற்சி அவசியமா?

முன்பெல்லாம் குடிமைப் பணி தேர்வுக்கு பயிற்சி பெறுவதற்கு மாணவர்கள் டெல்லிக்கு சென்று வந்தனர். ஏனென்றால் பயிற்சி மையங்கள் அங்கு அதிகளவில் இருந்தது. தற்சமயம் ஆட்சிப் பணி தேர்வுக்கு பயிற்சியளிக்கும் மையமாக சென்னை மாறி வருகிறது. பயிற்சி மையங்களில் பயிற்சி எடுப்பது மட்டுமே தேர்வில் வெற்றி பெறுவதற்கான உத்திரவாதத்தை தராது என்பது என்னுடைய ஆலோசனை ஆகும். தற்போதைய தகவல் தொழில்நுட்ப இணைய வளர்ச்சியால் குக்கிராமத்திலிருந்து கூட தயாரக முடியும். இதற்கான விளக்க வீடியோக்கள் யூ டியூப் தளத்தில் ஏகமாக இருக்கிறது. உதாரணமாக சமீபத்தில் வெளிவந்த குடிமைப் பணித் தேர்வுகளில் வெற்றிபெற்ற அகில இந்திய தரவரிசைப் பட்டியலில் இரண்டாம் இடம் பெற்ற ஹரியாணவை சார்ந்த அனு குமாரி சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இத்தேர்விற்கு புதிய நபராகயிருப்பின் இத்தேர்வைப்பற்றி விளக்கமாக என்ன, ஏது, எவ்வாறு என்பது பற்றி அறிந்து கொள்வதற்கும் மாதிரி தேர்வு எழுதுதல் போன்றவற்றிற்காக ஒரு பயிற்சி மையத்தில் சேர்வது சிறந்த அறிவுரையாகும். ஆனால் பணம் செலவு செய்வதில் கவனமாக இருத்தல் வேண்டும். நீங்கள் மையங்களில் செலவு செய்து சேர இயலாது என்று நினைத்தால், இலவச பயிற்சி மையங்கள் நிறைய உள்ளன. அவற்றில் ஏதேனும் ஒரு பயிற்சி மையத்தில் சேர்ந்து கொள்ளலாம் அல்லது எங்கள் பயிற்சி மையம் எப்போதும் உங்களுக்கு உதவிக்கரம் நீட்டும். தமிழக அரசு ஆண்டுதோறும் நுழைவுத்தேர்வு நடத்தியும் இலவச தங்குமிடம் மற்றும் உணவுடன் கூடிய இலவசப்பயிற்சியளிக்கிறது. (http://www. civilservicecoaching. com/. com)

### குடிமைப்பணி தேர்விற்கு நீங்கள் எப்பொழுதிலிருந்து தயாராகலாம்?

ஒருவர் தங்களுடையப் பள்ளிப்படிப்பு முடிந்தவுடன் குடிமைப்பணி தேர்விற்கு தயாராவது சாலச்சிறந்ததாகும். சிலர் போட்டித் தேர்வுகளை எழுதுவதற்கு உகந்த பாடப்பிரிவுகளை பட்டப்படிப்பிற்கும் தேர்வு செய்கின்றனர். ஆனால் நம்மில் பலர் பட்டப்படிப்பை படித்துக் கொண்டிருக்கும் போது அல்லது பட்டப்படிப்பை முடித்த பிறகு இத்தேர்வினை எழுதலாம் என எண்ணுகின்றனர். மேலும் சிலர் உயர்க் கல்விப் பயிலும் போது போட்டித் தேர்விற்கு தயாராக துவங்குகின்றனர். நீங்கள் உண்மையாகவே இந்திய ஆட்சிப் பணியாளராக வேண்டுமென விரும்பினால் நீங்கள் பட்டப்படிப்பின் போதே தேர்வுக்குத் தயாராகலாம்.

இத்தேர்விற்கு உங்களைத் தயார்படுத்திக் கொள்ளும் போது உங்களது பட்டப்படிப்பிற்கு எந்த பாதிப்பும் இல்லாமல் கவனம் முழுவதும் பட்டப்படிப்பை வெற்றிகரமாக முடிப்பதில் ஆர்வமாக இருத்தல் வேண்டும். பட்டப்படிப்பு பாடங்களைப் படிக்கும் காலங்களில் பொது அறிவு பகுதிகளில் மட்டுமே கவனம் செலுத்த வேண்டும். உங்களது பட்டப்படிப்பை வெற்றிகரமாக முடித்த பிறகு விருப்பப் பாடத்திற்கு தயாராகலாம். சிலர் தங்களது பட்டப்படிப்பையே போட்டித் தேர்விற்கான விருப்பப் பாடமாக தேர்ந்தெடுத்துக் கொள்கின்றனர்.

### பட்டப்படிப்பு படிப்பவர்கள் என்ன செய்ய வேண்டும்?

முதலில் உங்களை மனதளவில் இத்தேர்வுக்கு தயார் செய்ய வேண்டும் அதனைத் தொடர்ந்து உங்களைச் சுற்றி நடக்கக்கூடிய சமூக, பொருளாதார, சர்வதேச நிகழ்வுகளைக் கூர்ந்து கவனிக்கவேண்டும் இதற்கு துனையாக செய்தித்தாள்களை இந்த நிலையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். முடிந்தால் ஏற்கனவே வெற்றிபெற்றவர்களை சந்தித்து ஆலோசனை கேட்கலாம். கல்லூரியில் நடைபெறும் விளையாட்டு மற்றும் வினாடி வினா, கருத்தரங்கம் போன்ற போட்டிகளில் கலந்து கொள்ளலாம். இதன்மூலம் தன்னம்பிக்கையும் மற்றவர்களுடன் கலந்து பேசும் திறன், குழுச்செயல்பாடு போன்றவை வளரும்.

### பணிபுரிந்து கொண்டே தேர்வுக்கு தயாராகலாமா?

ஆம். ஆனால் அதற்கு முன்பு ஒரு உண்மையை புரிந்து கொள்ள வேண்டும். எந்த வித வேலைக்கும் செல்லாமல் முழு நேரமும் படிப்பவர்களுக்கும் உங்களுக்கும் கிடைக்கும் நேரத்தை ஒப்பிட்டு அதனைக் குற்ற உணர்வாக கருதக்கூடாது நீங்கள் உங்களுக்கு கிடைக்கும் குறைந்த நேரத்தைக் கூட இதற்காக பயன்படுத்தவேண்டும். மேலும் நீங்கள் அலுவலகத்தில் இணையத்தில் உலவுவதை படிப்பதாக கருதக்கூடாது அது தகவல்களை அறிந்து கொள்வதற்காகவே இருக்க வேண்டும். தினசரி மூன்று மணி நேரம் முதல் நான்கு மணி நேரம் படித்தாலே சிறப்பாக தயார் செய்யமுடியும். ஆனால் தேர்வுக்கு முன்னர் சில மாதங்களாவது நீங்கள் விடுப்பு எடுத்துக்கொண்டு தீவிரமாக தயார் செய்ய வேண்டும்.

### எவ்வளவு காலம் தயார் செய்ய வேண்டும்?

இத்தேர்வைப் பொறுத்தவரை குறைந்தபட்சம் ஒன்றரை வருடமாவது நீங்கள் உண்மையாக தீவிரமாக தயாராகுதல் வேண்டும். ஏனெனில் இத்தேர்வு

பற்றிய புரிதலுக்கும் சரியான அணுகுமுறையை தெரிந்து கொள்ளவுமே ஆறு மாதங்களுக்கு மேல் ஆகிவிடும். மேலே சொன்னது ஒன்றரை வருடம் என்பது குறைந்தபட்சம் ஆனால் நீங்கள் எவ்வாறு தயாராகிறீர்கள் என்பதனைப் பொறுத்து இக்காலம் மாறுதலுக்கு உட்பட்டது.

## தினமும் எவ்வளவு நேரம் தயாராக வேண்டும்?

குறைந்த பட்சம் தினசரி 6 முதல் 8 மணி நேரம் தீவிர தயாரிப்பு தேவை. இதில் நீங்கள் செய்தித்தாள் வாசிப்பது மற்றும் தொலைக்காட்சி விவாதங்கள் பார்ப்பது நீங்கலாக.

## புதிதாக இத்தேர்வுக்கு தயாராகுபவர்கள் எங்கிருந்து தயாராக வேண்டும்?

புதிதாக இத்தேர்வுக்கு தயாராகுபவர்கள், தினசரி செய்தித்தாள் வாசித்தலில் இருந்து துவங்க வேண்டும். அதாவது நாளிதழ்களில் வரும் செய்தியினை அப்படியே உள்வாங்காமல் ஏன்? எதற்காக இந்த செய்தி வந்துள்ளது?. செய்தியின் பின்புலம் என்ன? இதன் தாக்கம் சமூகத்தில் எவ்வாறு இருக்கும் என கூடுமானவரை அலசி ஆராய்ந்து கூடுதலாக தெரிந்து கொள்ளவேண்டும் ஆரம்பத்தில் இது கடினமான செயலாக தோன்றும் நாளடைவில் இச்செயல் எளிமையானதாகவும் ஆர்வமானதாகவும் மாறிவிடும்.

இதில் ஈடுபாடு வருவதற்கு ஒருவர் சில புத்தகங்களை வாசிப்பதிலிருந்து துவங்கலாம், சிறகுக்குள் வானம் (தமிழில் தேர்வெழுதி முதல்முதலாக இந்திய ஆட்சிப்பணிக்கு சென்ற திரு. பாலகிருஷ்ணன் இ. ஆ. ப எழுதியது), இராமசந்திர குகாவின் நவீன இந்தியாவின் சிற்பிகள், முன்னாள் குடியரசுத் தலைவர் எழுதிய அக்னிச் சிறகுகள், இந்திய ஆட்சிப்பணி அதிகாரி திரு. இறையன்பு எழுதிய ஐ ஏ எஸ் தொடர்பான புத்தகங்களை படிப்பதன் மூலம் துவங்கலாம். மேலும் அண்ணா நூற்றாண்டு நூலகத்தின் யூ டியூப் சேனலில் சிறந்த ஐ ஏ எஸ் அதிகாரிகளின் பேச்சுக்கள் மற்றும் ஆலோசனைகள் உள்ளன. அவற்றைப் பார்ப்பதின் மூலமும் துவங்கலாம். முடிந்தால் தமிழ்ச்செல்வன் ஐ ஏ எஸ் எனும் திரைப்படம் இந்திய ஆட்சிப்பணியைப் பற்றி சிறப்பாக காட்சிப்படுத்தியிருக்கும் எவ்வாறு நீங்கள் மக்களுக்கு சேவை செய்ய இயலும் என்பது புரியும்.

## பலமுறை தேர்வெழுதினால் மட்டுமே இத்தேர்வில் வெற்றிபெற இயலுமா?

அப்படியெல்லாம் ஏதுமில்லை முறையான திட்டமிடல், தெளிவான தயாரிப்பு மற்றும் இத்தேர்வுக்காக கணிசமான காலத்தையும் முறையாக பயன்படுத்துவதின் மூலம் முதல் முயற்சியிலேயே வெற்றி பெறலாம். கடைசி முயற்சியிலும் வெற்றி பெறலாம்.

## இத்தேர்வு மிகவும் கடினமான தேர்வு என்ற பரப்புரை வந்து கொண்டே இருக்கிறதே இது உண்மையிலேயே கடினமானதா?

தேர்வு கடினமானது என்ற எண்ணம் தேவையில்லை. ஆனால் பொதுவாக வெளியே பரப்பப்படும் அளவுக்கு கடினமான தேர்வு அல்ல. கவனமான திட்டமிடல் மற்றும் தெரிவு செய்த வாசிப்பு ஆகியவற்றை செய்தால் கடினமல்ல.

## நாம் சூரியனுக்கு கீழ் உள்ள எல்லாவற்றையும் படிக்க வேண்டுமா?

பொதுவாக நாம் பார்க்கும் அனைத்தையும் படிக்கவேண்டும் என்ற பொய் பரப்புரை நீண்ட காலமாகச் சொல்லப்பட்டு வருகிறது ஆனால் உண்மை அதுவல்ல. கணிசமான அளவு தகவல்களை நாம் தெரிந்து வைத்திருக்க வேண்டும் ஆனால் எல்லாவற்றையும் அல்ல கொடுக்கப்பட்டுள்ள பாடத்திட்டத்தின் தலைப்பை ஒட்டி போதுமான அளவு தெரிந்திருந்தால் நல்லது. நாம் படிக்கும் எதனையும் செய்தியாகவோ தகவல்களாகவோ உள்வாங்காமல் சிறிய பகுத்தாய்விற்குப் பிறகு மூளைக்குள் ஏற்றவேண்டும்.

## பாடங்களை நாம் மிக ஆழமாக கல்வியாளர்களைப் போல் படிக்க வேண்டுமா?

அப்படியெல்லாம் ஏதும் இல்லை. பாடத்தின் அடிப்படை மற்றும் அதனுடன் தொடர்புடைய கூடுதல் தகவல்களை தெரிந்து வைத்திருந்தால் போதும் ஆய்வு மாணவர் படிப்பது போல ஆழமாகப் படிப்பது தேவையற்றது.

## நான் ஒரு நாளைக்கு எவ்வளவு நேரம் படிக்க வேண்டும்?

சிறப்பான தயாரிப்பு என்பது நாம் எவ்வளவு மணி நேரம் படிப்பது என்பதில் இல்லை பாடத்தை நாம் எவ்வாறு உள்வாங்கி படிக்கிறோம் என்பதில்தான் உள்ளது. சில மாணவர்கள் ஒரு தலைப்பை படிக்க 2 மணி நேரம் எடுத்துக் கொண்டால் இன்னும் சிலர் 30 நிமிடங்களில் முடித்து விடுவர் ஆகவே ஒவ்வொரு நபரின் திறனைப் பொருத்து நேர அளவு மாறுபடும்.

## படிக்கும் போது குறிப்புகள் எடுத்து படிக்க வேண்டுமா?

குறிப்புகள் எடுப்பது ஒருவருக்கு பிடித்தமானதாகவும் ஒத்துப் போவதாகவும் இருந்தால் எடுக்கலாம். ஆனால் குறிப்பெடுத்துதான் தயாராக வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. சில பேர் படித்த புத்தகங்களை மறுவாசிப்புக்கு பயன்படுத்துவர். சிலர் தாங்கள் எடுத்த குறிப்புகளை மறுவாசிப்புக்கு பயன்படுத்துவர். குறிப்புகள் எடுப்பதனால் சிலருக்கு மனதில் நன்கு பதிவாகும் மறுவாசித்தலின் போது காலம் விரயமாவது தவிர்க்கப்படும்.

## பாடப்புத்தகத்தை எவ்வாறு வாசிப்பது மற்றும் குறிப்பெடுப்பது.

ஒருவர் பாடப்புத்தகத்தை முதலில் ஒரு கதைபோல வாசிக்க வேண்டும் பலமுறை வாசித்து தாங்களுக்கு புரியும் வகையில் குறிப்புகளை எடுத்துக் கொள்ளலாம்.

## விருப்பப்பாடத்தை எவ்வாறு தேர்ந்தெடுப்பது?

விருப்பப் பாடத்தினை தெரிவு செய்வதற்கு முன்பு ஏற்கனவே தயாராகிக் கொண்டிருக்கும் மாணவர்கள் மற்றும் இத்தேர்வில் வெற்றி பெற்றவர்களை சந்தித்து ஆலோசனை பெறலாம். விருப்பப் பாடத்தை பொருத்தவரையில் நீங்கள் கல்லூரியில் படித்த பாடத்தையே தேர்ந்தெடுக்க வேண்டிய அவசியம் இல்லை. உங்களுக்கு விருப்பமான பாடத்தினையும் தேர்ச்சி விகிதம் மற்றும் விருப்ப பாடத்திற்கான ஆலோசனை மற்றும் பாடக்குறிப்புகள் கிடைக்கிறதா என்பதனையும் வைத்து தெரிவு செய்யலாம். முக்கியமாக நீங்கள் தேர்வு செய்யும் விருப்பப்பாடம் பொது அறிவுத் தாள்களில் ஏதாவது ஒன்றுக்கு உதவி புரிகிறதா என்ற கோணத்திலும் ஆராய்ந்து முடிவெடுக்கலாம். உதாரணமாக, பூகோளம் படித்தால் முதன்மைத் தேர்விற்கு உதவியாக இருக்கும். இவ்வாறு ஆராய்ந்து விருப்ப பாடத்தினை தெரிவு செய்வது நல்லது.

## சிலர் நீண்ட நாள்கள் தேர்வுக்கு தயாராகியும் தேர்ச்சி பெறவில்லை ஆனால் சிலர் ஏதேனும் பணியில் இருந்து கொண்டே இரண்டு முறையும் வெற்றி பெறுகிறார்கள் எவ்வாறு?

நீண்ட நாள்களாக தயார் செய்தும் வெற்றி பெற முடியவில்லையெனில் அது அவர்களின் தவறான அணுமுறையாகவோ அல்லது தீவிரமாக தயார் செய்யாததின் விளைவாகவோ இருக்கலாம். மேலும் மத்திய அரசுப் பணியாளரின்

# இந்திய குடிமைப்பணித்தேர்வு அறிமுகம்

தெரிவானது எல்லோரையும் தெரிவு செய்வதல்ல சிறப்பானவர்களை தெரிவு செய்வதே ஆகும். இரண்டு முறை வெற்றிபெறுவோர்கள் உறுதியாகவும் இதற்காக தங்களை முழுமையாக அர்ப்பணித்து சிறந்த செயல் திட்டத்தினை கொண்டு தயார் செய்திருப்பார்கள். மேலும் இவர்கள் தங்களின் தவறுகளை திருத்திக் கொண்டு தயாராவதும் ஒரு காரணமாகும்.

## இங்கே வயது ஒரு காரணியாக இருக்குமா? சிலர் 20 வயதிலிருந்தே துவங்குகிறார்கள் சிலர் 30 வயதில் துவங்குகிறார்கள்.

மேலே கூறிய இருவகைப் பிரிவினரும் வெற்றி பெற்றுள்ளார்கள் எனவே வயது ஒரு தடையாக இருக்காது. மேலும் அதிக வயதுடையவர்களை நேர்காணல் குழுவும் குறைத்து மதிப்பிடுவதில்லை.

சில நேரங்களில் நான் இதை நினைத்து கவலை கொள்கிறேன். தற்போது நான் எந்தப் பணியிலும் இல்லை, எனக்கென எந்த பணிப் பாதுகாப்பு இல்லை மேலும் இத்தேர்வோ பல மாறுதல்களைக் கொண்டது. சில நேரங்களில் நான் இந்தமுறை தோல்வி அடைந்து விடுவேனோ எனக் கருதுகிறேன் மேலும் ஒரு ஆண்டு முழுவதும் இத்தேர்வுக்கு என்னால் தயாராக இயலாது. நான் என்ன செய்ய வேண்டும்?

இத்தேர்வில் வெற்றி பெறுவதற்கு முதலில் உங்களுக்குத் தேவை தன்னம்பிக்கை அதற்குப் பின்னரே மற்றவையெல்லாம். மேலே கேட்கப்பட்ட கேள்வியை நீங்கள் மனதில் வைத்து தீவிர ஆய்வுக்குப் பின் ஒரு முடிவுக்கு வரலாம். ஒராண்டு காலகட்டத்தில் முடியாது என்றால் ஏதாவது ஒரு தேர்வில் வெற்றி பெற்று பணிப் பாதுகாப்பு பெற்ற பின் இத்தேர்வுக்கு தயாராகலாம். நிறைய பேர் இந்த முறையில் வெற்றி கொண்டுள்ளனர் எனவே நீங்களே இதற்கான முடிவுகளை தீவிர ஆய்வுக்குப் பின் எடுக்க வேண்டும்.

## இத்தேர்வு தயாரிப்புக் காலம் முழுவதும் நாம் எவ்வாறு ஊக்கமாக இருப்பது?

சில நேரங்களில் சோர்வுகள், இனம்புரியாத கவலை போன்றவை வரலாம் ஆனால் அதிலிருந்து நாம் மீண்டு உடனடியாக தயாரிப்புக்குள் ஈடுபடவேண்டும். இது போன்ற கவலை, மனத்திடமில்லாத காலங்களில் நமக்கு துணையாக நம்மை நன்றாக ஊக்கப்படுத்தக்கூடிய புத்தகங்களை வாசித்து நம்மையே நாம் ஊக்கப்படுத்திக் கொள்ள வேண்டும்.

நான் ஒரு ஏழ்மையான குடும்பத்தைச் சார்ந்தவன் எனக்கு எந்த ஒரு வழிகாட்டியும் இல்லை எனக்கு இது ஒரு குறையாகத் தெரிகிறது.

நேர்மையாகச் சொல்ல வேண்டுமென்றால் வழிகாட்டுதல் இருந்தால் குறுகிய காலத்திற்குள் உங்களால் சில செயல்களை சிறப்பாக செய்யமுடியும். நீங்கள் நிதி வசதியின் அடிப்படையிலேயே பலமற்றவராக இருக்கின்றீர்கள் உங்களிடம் உண்மையான மனத்திடம் இருந்தால் ஏழ்மை ஒரு பொருட்டல்ல. மேலும் இப்போதைய காலகட்டத்தில் வழிகாட்டுதலுக்காக அதிக இணையதளங்கள், யூடியுப் சேனல்கள், வலைப் பக்கங்கள், புத்தகங்கள் ஆகியவை உள்ளது அதனை முறையாகப் பயன்படுத்தினால் இது ஒரு குறையல்ல. மேலும் தமிழ்நாடு அரசு சென்னையில் இலவசப் பயிற்சியும் மாவட்டம் தோறும் மாவட்ட நூலகத்தின் வாயிலாகவும், வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலமாகவும், பல்கலைக் கழகம் மூலமாகவும் இலவசப் பயிற்சி அளிக்கின்றது அதை முறையாக பயன்படுத்திக் கொள்ளலாம்.

## தமிழில் தயாராவது கடினமான பணி என்று கூறுகிறார்களே உண்மையா?

கடினம் என்பது அவரவர் பார்வையில் ஆனால் ஆங்கிலத்துடன் ஒப்பிடும் போது சில நடைமுறைச் சிக்கல்கள் இருப்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும் ஆனால் அவற்றையெல்லாம் பொய்யாக்கி தமிழ் நாட்டிலிருந்து தமிழிலேயே தேர்வெழுதி வென்ற திரு சரவணன் ஐ. ஏ. எஸ், திரு இளம்பகவத் ஐ. ஏ. எஸ், திரு மணிகண்டன் ஐ. ஏ. எஸ் ஆகியோர் எடுத்துக்காட்டாக திகழ்கின்றனர். எனவே கடினமான திட்டமிட்ட உழைப்புடன் செயலாற்றும் போது மொழி ஒரு பொருட்டல்ல. ஆனால் நடைமுறைச் சிக்கல்கள் என்பது இங்கே இரண்டு இருக்கின்றது ஒன்று வினாத்தாளைப் புரிந்து கொள்ள போதுமான ஆங்கில அறிவைப் பெற்றிருப்பது மேலும் தேர்வுக்கு தயாராகும் காலகட்டத்தில் சில முக்கிய தலைப்புகளுக்கான ஆதாரக் குறிப்புகள் தமிழில் கிடைப்பதில்லை என்ற இரண்டும் தான் ஆனால் தமிழில் கிட்டத்தட்ட %70 வரை ஆதாரக் குறிப்புகள் இருக்கின்றன அதனை முறையாக பயன்படுத்தினாலே வெற்றி கிடைக்கும். எனவே தமிழிலேயே தயாராக வேண்டும் என முடிவெடுங்கள்.

## தமிழில் எவ்வாறு தயாராவது?

தமிழில் தயாராவது என நீங்கள் முடிவெடுத்துவிட்டால் ஒன்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும், வினாத்தாள்கள் முதல் நிலை மற்றும் முதன்மைத் தேர்வில் ஆங்கிலத்திலேயே இருக்கும் எனவே வினாத்தாள்களை புரிந்து கொள்ளக்கூடிய அளவிற்கு நமது ஆங்கில அறிவை வளர்த்துக் கொள்ளவேண்டும். ஆங்கில அறிவை வளர்த்துக் கொள்வதற்கு நாம் முதலில் பாட வாரியான கலைச் சொற்களை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் முறையாக தயார் செய்ய வேண்டும் பின்பு இதனை நடப்பு நிகழ்வுகளிலும் பாடத்திலும் நாம் புகுத்தி தயார் செய்தால் தமிழில் தயார் செய்வது எளிது. பாடவாரியான கலைச் சொற்களுக்கு சென்னை பல்கலைக் கழகத்தின் துறைவாரியான அகராதியைப் பயன்படுத்தலாம்.

## தமிழில் பயிற்சியளிக்கக் கூடிய பயிற்சி நிறுவனங்கள் உள்ளனவா?

இப்போது வரை தமிழ் மொழிக்கு முக்கியத்துவம் கொடுத்து பயிற்சியளிக்கும் நிறுவனங்கள் இல்லை. 2019 ஆம் ஆண்டு முதல் நிலைத்தேர்வுக்கு தமிழ் வழியில் முதல் நிலை மற்றும் முதன்மைத் தேர்வுக்கு பயிற்சி அளிக்க நமது மையம் ஏற்பாடுகள் செய்து வருகிறது. ஜூலை 2 வது வாரம் முதல் பயிற்சி வகுப்புகள் தொடங்கும். பாடக்குறிப்புகள் அனைத்து தலைப்புகளுக்கும் தமிழ்மொழியிலேயே வழங்கப்படும். நடப்பு நிகழ்வுகளுக்கும் தமிழ் மொழியிலேயே குறிப்புகள் வழங்கப்படும்.

# பொதுவாக கூறப்படும் மாயைகள்

## நீங்கள் ஐ ஏ எஸ் ஆவதற்காக கனவு காண வேண்டும்

உண்மையிலேயே அதெல்லாம் தேவையில்லை நீங்கள் ஆட்சிப் பணித்தேர்வில் வெற்றியடைவதற்கு எந்த காரணம் வேண்டுமானாலும் இருக்கலாம் அது இறுதி வரை உங்களை ஒருமுகப்படுத்தி வழி நடத்தும்

## தயார் செய்வதற்கு டெல்லி அல்லது சென்னை போன்ற நகரங்களில் தங்கிப்படிக்க வேண்டும்.

இதுவும் பொதுவாக பயிற்சி நிறுவனங்களால் உருவாக்கப்படும் போலியான தோற்றம் அதேபோல் நகரங்களில் தங்கி பயில்வது உதவும் ஆனால் அது வெற்றியை உறுதிபடுத்தாது. தற்போதைய காலத்தில் புத்தகங்களை வாங்கக் கூட நகரங்களுக்கு செல்ல வேண்டிய தேவையில்லை மின்னனு வணிக நிறுவனங்கள் மூலம் வாங்கிக் கொள்ளலாம் அல்லது இணையத்தில் போதுமான அளவு குறிப்புகள், வீடியோக்கள் ஆகியவை நிரம்பி வழிகின்றன. உங்களின் உண்மையான அக்கறை மட்டுமே வெற்றிக்கு வழி.

# இந்திய குடிமைப்பணித்தேர்வு அறிமுகம்

## நுண்ணறிவு திறன் 500 வேண்டும் என்கிறார்களே

வெற்றிபெற்றவர்களை உற்று நோக்குங்கள் இதற்கான விடை விளங்கும்.

## ஒரு நாளைக்கு 25 மணி நேரம் படிக்க வேண்டும் என்கிறார்களே

வெற்றி பெற்றவர்கள் அனைவரும் நம்மிடமிருந்தே வருகிறார்கள் வேற்றுகிரகத்திலிருந்து அல்ல. பொதுவாக 7 முதல் 9 மணி நேர தூக்கம் வேண்டும். ஒரு நாளைக்கு 6 முதல் 8 மணி நேரம் தயார் செய்தால் போதுமானது.

## சமூக வாழ்க்கைக்கு விடையளிக்க வேண்டுமாமே

இத்தேர்வில் வெற்றி பெறுவதற்கு துறவெல்லாம் மேற்கொள்ள வேண்டியதில்லை ஆனால் உங்களது சமூக நடவடிக்கைக்கு (திருவிழா, திருமண விழா) சில வரையறைகளை வைத்துக் கொள்ள வேண்டும். மேலும் சமூக வலைத்தளங்களை (whatsapp, facebook, telegram) எந்த அளவுக்கு பயன்படுத்த முடியுமோ அந்த அளவுக்கு பயன்படுத்த வேண்டும் (தேவையற்ற விவாதம் கட் ஆப், தேர்வுமுறை மாற்றம் போன்றவற்றிலிருந்து விலகியே இருக்க வேண்டும்)

## ஆங்கிலத்தில் மிகவும் புலமை பெற்றிருக்க வேண்டுமாமே?

ஆங்கிலத்தில் நீங்கள் ஆராய்ச்சி செய்யத் தேவையில்லை. ஆனால் அடிப்படையான ஆங்கில் அறிவு அவசியம் அதில் நீங்கள் பின்னடைவதாக கருதுகின்றீர்களேயானால் அதனை அறிந்து கொள்ள முயற்சி செய்யவேண்டும்.

## அதிர்ஷ்டம் வேண்டும் என்கிறார்களே

எதுவுமே செய்யாமல் அதிர்ஷ்டம் கை கொடுக்காது உங்கள் கடின முயற்சிக்கு ஏற்ப அதிர்ஷ்டம் கை கொடுக்கும்.

## பயிற்சி விவரம்

### பயிற்சிக்காலம்

ஜீலை 2018 முதல் ஏப்ரல் அல்லது மே 2019 ஆம் ஆண்டு வரை

### பயிற்சி நேரம்

வாரநாட்களில் காலை முதல் மதியம் வரை

### பயிற்சியளிக்கப்படும் பாடங்கள்

முதல் நிலைத்தேர்வுக்கான பொதுத்தாள் மற்றும் முதன்மைத் தேர்வுக்கான, கட்டுரைத்தாள் மற்றும் பொது அறிவுத்தாள், 4 ,3 ,2 ,1 ஆகிய பகுதிகளுக்கு பயிற்சி அளிக்கப்படும்

### பயிற்சி அளிக்கப்படும் விதம்

பாடத்திட்டமானது மரபு வழித் தலைப்புக்களையும் அதே நேரம் நடப்பு நிகழ்வுகளுடன் தொடர்பு படுத்தி என இரண்டு வழிகளிலும் வகுப்புகள் நடைபெறும் அதே நேரம் எழுத்துப் பயிற்சிக்கும் வாரம் ஒரு நாள் ஒதுக்கப்பட்டு பயிற்சி வழங்கப்படும்.

## பாடம் நடத்தப்படும் மொழி

தமிழ் வழியில் (அதே நேரம் முக்கியச் சொற்களுக்கு ஆங்கில வடிவிலும் விளக்கப்படும்)

## பயிற்சி எதையெல்லாம் உள்ளடக்கியது?

- பாடத்திட்டத்தினை அடிப்படையாகக் கொண்ட கருப்பொருளை அறிந்து கொள்ளும் வகையில் விரிவான பயிற்சி
- தனிப்பட்ட கவனம்
- கட்டுரை எழுதுவதற்கான பயிற்சி
- முதல்நிலை மற்றும் முதன்மைத் தேர்வுக்கான விரிவான விளக்கமான பாடக்குறிப்புக்கள் தமிழ் மொழியில் வழங்கப்படும்
- முதல் நிலை மற்றும் முதன்மைத் தேர்வுக்கான வகுப்பறைத் தேர்வுகள்
- மாதவாரியான நடப்பு நிகழ்வுகள் தொகுப்புகள் தமிழில் வழங்கப்படும்

## இணையவழி வகுப்புகள்

மேலே கூறப்பட்ட அனைத்து அம்சங்களும் இணையவழி வகுப்புகளுக்கும் பொருந்தும். தேர்வுகள் மற்றும் பாடக்குறிப்புகள் அஞ்சல் வழியில் அனுப்பப்படும்.

## இணையவழி வகுப்பு எவ்வாறு நடைபெறும்?

இணையவழி வகுப்பு என்பது வகுப்பறையில் நடைபெறும் நிகழ்வுகள் அனைத்தும் கேமரா மூலமாக இணைக்கப்பட்டு அவை இணையம் மூலமாக நேரலையில் மாணவர்கள் காணும் வண்ணம் வடிவமைக்கப்பட்டிருக்கும். இணையவழி மாணவர்களுக்கு இந்த வசதியை பயன்படுத்துவதற்கு தனியே பயனாளர் ஐடி மற்றும் கடவுச் சொல் வழங்கப்படும் இதனைப் பயன்படுத்தி அவர்கள் எப்போது வேண்டுமானாலும் வகுப்பினை காண இயலும்.

## வகுப்பில் எவ்வாறு சேர்வது?

வகுப்பில் சேர்வதற்கு முதலில் வருபவர்களுக்கே முன்னுரிமை என்ற அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். இணையவழியில் 30 பேர் அதே போல் நேரடி வகுப்பில் 30 பேர் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். நேரடி வகுப்பில் சேர்வதற்கு மே 20 முதல் ஜீன் 20க்குள் பயிற்சி மையத்திற்கு வந்து சேர்ந்து கொள்ள வேண்டும். இனைய வழி வகுப்பில் இணைய விரும்புபவர்கள் ஆன்லைன் மூலம் சேர்ந்து கொள்ளலாம். சேர்வதற்கு முன் தொலைபேசியில் தங்கள் சந்தேகங்களை கேட்டு விளக்கம் பெற்றுக் கொள்ளவேண்டும். சேர்க்கையின் போது விளக்கமான கையேடு வழங்கப்படும்.

# தொகுப்பாளர் குறிப்பு

ஐயாச்சாமி முருகன் திருநெல்வேலி மாவட்டம் கீழக்கலங்கல் எனும் கிராமத்தைச் சார்ந்தவர்.இளங்கலை வணிகவியல் பட்டத்தினை தென்காசியில் உள்ள கல்லூரியில் முடித்தார். ஏற்கனவே குருப் 1 மற்றும் 2 முதன்மைத் தேர்விற்கு இரண்டு புத்தகங்கள் எழுதியுள்ளார் அதேபோல் நடப்பு நிகழ்வுகளை தொடர்ச்சியாக வெளியிட்டும், யூடியூப் மற்றும் முக நூல் மூலம் போட்டித்தேர்வு குறித்த விழிப்புணர்வு மற்றும் வழிகாட்டுதலையும் செய்துவருகிறார்.

Website: http://iyachamy. com/
Facebook: https://www. facebook. com/iyachamyacademy/
YouTube: search as Iyachamy
Whatsapp: 044-48601550

